# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024–2025

### மானியக் கோரிக்கை எண். 44


**தா.மோ. அன்பரசன்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2024

## உள்ளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 13 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) | 89 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) | 116 |
| 5. | தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்(EDII–TN) | 125 |
| 6. | தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம் (FaMeTN) | 147 |
| 7. | தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) | 165 |

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2024–2025

### 1. முகவுரை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSMEs) இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்வதுடன் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 30% மற்றும் மொத்த ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 50% பங்களிக்கின்றன. (நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் பங்கு: குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின், செய்தி அறிக்கை, ஆகஸ்ட் 2023). இந்தியா முழுவதும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 12 கோடி நபர்களுக்கு மேலாக பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பினை வழங்குகின்றன (ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வலைதள தகவல் பலகை).

இந்தியாவில் தற்போது 2.5 கோடி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன. (உத்யம் பதிவுகள்– ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வலைதள தகவல் பலகை). குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி, சேவை மற்றும் வர்த்தகம் சார்ந்த தொழில்களில் தனது பங்கினை செலுத்துகின்றன. இந்தியாவின் நிலவு பயணத்திற்கான முக்கிய கூறுகளை வழங்கியது முதல், உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் புதுமையான தொழில்நுட்ப தயாரிப்புகளை உருவாக்குவது மற்றும் அன்றாட பயன்பாட்டிற்கான நுகர்வோர் பொருட்களை வழங்குவது வரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்கு இன்றியமையாததாகும்.

## 1.1. தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

ஒன்றிய அளவில் 15% தொழிற்சாலைகளுடன் தொழில் வளர்ச்சியில் முன்னேறிய மாநிலமாக


தமிழ்நாடு விளங்குகின்றது (இன்வெஸ்ட் இந்தியா, ஒன்றிய அரசு). மேலும் 46.46 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஏற்றுமதி பங்களிப்புடன் சந்தை வாய்ப்புகளில் தமிழ்நாடு, இந்திய அளவில் மூன்றாவது மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற தமிழ்நாட்டின் தொலைநோக்கு இலக்கினை அடைவதிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு இன்றியமையாததாகும். 25 இலட்சத்திற்கும் அதிகமான உத்யம் பதிவுகளுடன் ஒன்றிய அளவில் இரண்டாம் இடம் வகிப்பதுடன், 26% மேல் மகளிர் தொழில் முனைவோரினைக் கொண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு முன்னுதாரணமாகவும் உள்ளதோடு, மாநிலத்தில் நிலவும் வளமான வணிக சூழலுக்கு ஒரு சான்றாகவும் விளங்குகின்றது.

31.05.2024 வரை தமிழ்நாட்டில் உள்ள உத்யம் பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பிரிவு | எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|
| குறு நிறுவனங்கள் | 24,52,052 | 97.80% |
| சிறு நிறுவனங்கள் | 51,022 | 2.03% |
| நடுத்தர நிறுவனங்கள் | 4,388 | 0.17% |
| **மொத்தம்** | **25,07,462** | **100.00%** |

மாவட்டம் வாரியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பகிர்வு கீழ்கண்டவாறு:




| | சென்னை | கோவை | சேலம் | திருப்பூர் | மதுரை |
|---|---|---|---|---|---|
| ■ பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (இலட்சத்தில்) | 2.91 | 2.03 | 1.33 | 1.30 | 1.10 |

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முற்போக்கான வளர்ச்சிக் கொள்கைகளும், தொழில் முனைவோர் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோரின் பங்களிப்பும் இந்த வளர்ச்சிக்கான காரணிகளாகும். இந்தக் கொள்கைகள் ஐக்கிய நாடுகள் சபையின் கீழ்கண்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG), அடைய வழி கோலுகின்றன:

SDG 8: அனைவரையும் உள்ளடக்கிய, நீடித்த நிலையான வளர்ச்சியினை ஊக்குவித்தல் மற்றும் முழுமையான, ஆக்கப்பூர்வமான வேலை வாய்ப்பு மற்றும் அனைவருக்கும் கண்ணியமான வேலை.

SDG 9: மீள்தன்மையுடைய உள்கட்டமைப்பினை உருவாக்குதல், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில் மயமாக்கல் மற்றும் புதுமைகளை ஊக்குவித்தல்.

## 1.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அமைப்பு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அமைப்புகள் மற்றும் அவற்றின் பணிகள்

### 1.2.1. தொழில் வணிக ஆணையரகம்

- தொழில் கொள்கையை உருவாக்குவதில் உதவுதல் மற்றும் கொள்கையை பங்களிப்பாளர்களுக்கிடையே வெளிப்படுத்துதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான விரிவான திட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் சுயவேலைவாய்ப்பினை ஊக்கப்படுத்திடவும், மாநிலம் முழுவதும் சமச்சீரான தொழில் வளர்ச்சிக்காகவும் மானியங்கள் வழங்குதல்.

- வட்டார, மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள் மற்றும் மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள் மூலம் நிதித்தேவைகள் உட்பட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவைகளை பெற வழிவகை செய்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், 2006–ன் கீழ் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவை தொகையினை குறு மற்றும் சிறு நிறுவனங்களின் வசதியாக்க குழுக்கள் (MSEFCs) மூலம் விரைந்து பெற்றிட உதவுதல்.
- தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம், 2018 மற்றும் விதிகளை நடைமுறைபடுத்துதல் மூலம் ஒற்றைச் சாளர இணையதளத்தில் பெறப்பட்ட

விண்ணப்பங்களுக்கு விரைவான தீர்வு காண்பதை உறுதி செய்தல்.

- தொழிற்கூட்டுறவு நிறுவனங்களை நிர்வகித்தல்.
- 38 மாவட்ட தொழில் மையங்களின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
- ஆற்றல் தணிக்கை மேற்கொள்ளவும், தரச்சான்றிதழ் மற்றும் அறிவுசார் சொத்து உரிமை சான்றிதழ் பெறுவதற்கும் மானியங்கள் வழங்குவதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதை ஊக்குவித்தல்.

### 1.2.2 தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO)

- தொழிற்பேட்டைகளை நிறுவி பராமரித்தல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் வழங்குதல்.
- தொழில் குழுமங்கள் மற்றும் பொது வசதி மையங்களை நிறுவுதல் மற்றும் ஊக்குவித்தல்.
- தொழிலாளர்களின் நலனுக்காக தொழிலாளர் விடுதிகளை நிறுவுதல்.
- தொழில்களின் தற்பொழுதைய தேவைகளுக்கு ஏற்ப உடனடியாக தொழில் தொடங்குவதற்கு ஏதுவான தொழிற்கூட வசதிகள் (Plug and Play) ஏற்படுத்துதல்.

### 1.2.3 தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI)

- மாநில அரசு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு மரம் மற்றும் எஃகிலான அறைகலன்கள் தயாரித்து வழங்குதல்.
- வெளிச்சந்தையில் நியாயமான விலையில் தரமான மரச்சாமான்களை வழங்குதல்.

### 1.2.4. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN)

- மாநிலம் முழுவதும் தொழில்முனைவோர் கல்வி மற்றும் சுயவேலைவாய்ப்பை ஊக்குவித்தல்.
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே புத்தாக்கத்தினை ஊக்குவித்தல்.

### 1.2.5 தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் முகமை (FaMeTN)

- கடன் வசதி, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகள், முதலீடு, திறன், நிலைத்தன்மை மற்றும் துறை சார்ந்த முன்முயற்சிகளை

அணுகுவதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுதல்.

### 1.2.6 தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM – StartupTN)

- மாநிலத்தில் உள்ள புத்தொழில்களை செயல்படுத்த உகந்த சூழலை உருவாக்குதல்
- புத்தொழில்களுக்கும், தொழில் வளர்காப்பகங்களுக்கும் தேவைப்படும் நிதி உதவி வழங்குதல் மற்றும் நிதி பெற வசதி செய்தல்
- சமச்சீரான புத்தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்துதல்
- புத்தொழில்களை வழிகாட்டிகளுடன் (Mentors) தொடர்பு ஏற்படுத்தி பயன் பெற வழிவகுத்தல்

### 1.2.7. தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TANCOIR)

- தென்னை நார் சார்ந்த தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

- தென்னை நார் சார்ந்த புதிய பொருட்களை உற்பத்தி செய்வதினை ஊக்குவிப்பதின் மூலம் புதிய சந்தை வாய்ப்பினை உருவாக்கி உள் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளை ஈர்த்தல்.
- தமிழ்நாட்டில் உள்ள தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு திட்டங்கள் மற்றும் நிதி ஆதாரங்களை பெற வழிவகை செய்தல்.

### 1.2.8. தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx)

- தமிழ்நாட்டில் வேளாண் விளை பொருட்கள் பதப்படுத்துதலை ஊக்குவித்தல்.
- வேளாண் விளை பொருட்களிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், பானங்கள் மற்றும் சாறுகள் போன்றவற்றை உற்பத்தி செய்ய முன்முயற்சிகளை ஊக்குவிப்பதுடன் அதற்கான மேம்பாட்டு நடவடிக்கைகள் எடுத்தல்.

## 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம், அதன் தொடக்கத்தில் இருந்து, பல திட்டங்கள் மற்றும் மானியங்கள் மூலம் தமிழ்நாட்டில் தொழில்முனைவோரின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் பங்காற்றி வருகிறது. இத்திட்டங்களை இரண்டு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்: சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவுத் திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் விரிவாக்கம் செய்வதற்கான மானியங்கள். இந்தத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் **(SDGs)** குறிப்பாக பின்வரும் இலக்குகளுடன் இயைந்துள்ளன:

SDG 8: அனைவரையும் உள்ளடக்கிய, நீடித்த நிலையான வளர்ச்சியினை ஊக்குவித்தல் மற்றும் முழுமையான, ஆக்கப்பூர்வமான வேலை வாய்ப்பு மற்றும் அனைவருக்கும் கண்ணியமான வேலை.

SDG 9: மீள்தன்மையுடைய உள்கட்டமைப்பினை உருவாக்குதல், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கல் மற்றும் புதுமைகளை ஊக்குவித்தல்.

SDG 10: நாடுகளுக்குள் மற்றும் நாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்.

SDG 17: நீடித்த நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கு புத்துயிர் அளித்தல் மற்றும் செயல்படுத்தும் வழிமுறைகளை வலுப்படுத்துதல்.

தொழில் வணிக ஆணையரக நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் இயங்குகின்றன.

- மாவட்டத் தொழில் மையங்கள் (DICs)
- தொழிற் கூட்டுறவு சங்கங்கள்,

i. தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு (இண்ட்கோசர்வ்).
ii. சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்களின் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் (சேகோசர்வ்).
iii. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி).
iv. இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம்.
v. பிற தொழிற் கூட்டுறவு சங்கங்கள்.

- ஆய்வகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள்
  i. மத்திய மின்பொருள் சோதனைக்கூடம் (CETL).
  ii. இரசாயன ஆய்வகங்கள்.
  iii. சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வகம் (MICAL).
  iv. தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்கள்.

## 2.1. மாவட்டத் தொழில் மையங்கள்

தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் பொதுமேலாளர் தலைமையில் மாவட்டத் தொழில்மையங்கள் (DICs) செயல்படுகின்றன. இம்மாவட்டத் தொழில் மையங்கள், தொழில் முனைவோருக்கு சாத்தியமான திட்டங்களைக் கண்டறிதல், திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், தமிழ்நாடு ஒற்றை சாளர தகவின் மூலம் பல்வேறு அனுமதிகள் மற்றும் உரிமங்களைப் பெறுவதற்கு உதவுதல் மற்றும் தொழில்முனைவோர் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதை எளிதாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றன.

## 2.2. சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திட்டங்கள்:

தொழில் வணிக ஆணையரகத்தால் கீழ்க்கண்ட சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS).
2. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் (NEEDS).
3. வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP).
4. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP).
5. பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME).

முதல் மூன்று திட்டங்கள் தமிழ்நாடு அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நான்காவது திட்டம் ஒன்றிய அரசின் நிதி ஆதாரத்தோடும், ஐந்தாவது திட்டம் ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகளின் நிதி ஆதாரத்தோடும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) கீழ் பின்வரும் இலக்குகளை அடைய இத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

SDG 8.1: பல்வகைப்படுத்தல், தொழில்நுட்ப மேம்படுத்தல் மற்றும் புதுமை ஆகியவற்றின் மூலம் அதிக அளவிலான பொருளாதார உற்பத்தித்திறனை அடைதல், அதிக மதிப்பு கூட்டப்பட்ட மற்றும் மனித உழைப்பு மிகுந்த துறைகளில் கவனம் செலுத்துதல்;

SDG 8.3: உற்பத்தி நடவடிக்கைகள், கண்ணியமான வேலை உருவாக்கம், தொழில்முனைவு, படைப்பாற்றல் மற்றும் புதுமைகளை ஆதரிக்கும் வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை ஊக்குவித்தல் மற்றும் நிதிச் சேவைகளை அணுகுவது உட்பட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்

நிறுவனங்களை முறைப்படுத்தல் மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல்;

SDG 9.3: வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள சிறு நிறுவனங்கள் தங்கள் நிதி சார் தேவைகளை பூர்த்தி செய்வதற்குண்டான வசதி வாய்ப்புகளை எளிதாக அடைய உதவுதல் மற்றும் அவற்றுக்கான மதிப்பு கூட்டப்பட்ட சந்தைகளை ஒருங்கிணைத்தல்;

சுயதொழில் மற்றும் தொழில் முனைவோர் திட்டங்கள் மற்றும் 2023–24 ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

### 2.2.1. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS)

சமூக நீதி மற்றும் சமத்துவ வளர்ச்சிக்கான முன்முயற்சிகளை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. அதன்படி, **அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS),**

2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. பட்டியலின மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்தோரை தொழில்முனைவோராக ஊக்குவிக்கவும், வளர்க்கவும் இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டம் SDG இலக்கு 10.2ன் படி 2030–க்குள், வயது, பாலினம், மாற்றுத் திறனாளிகள், இனத்தோற்றம், மதம் அல்லது பொருளாதாரம் அல்லது பிற அடையாளங்களை கொண்டு வேறுபடுத்தாமல் அனைவரையும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சேர்க்கைக்கு அதிகாரம் அளித்தல் என்ற இலக்கினை எய்துவதை ஊக்குவிக்கிறது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

| தகுதி வரம்பு | |
|---|---|
| வயது வரம்பு | அதிகபட்சம் 55 ஆண்டுகள் |
| கல்வி தகுதி | தேவையில்லை. |
| தகுதியுடையோர் | பட்டியலின / பழங்குடியின தொழில் முனைவோர்: புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிறுவனங்கள் |

| | |
|---|---|
| தகுதியுடைய தொழில்கள் | உற்பத்தி, சேவை மற்றும் வர்த்தகம் சார்ந்த தொழில்கள் |
| திட்ட செலவு | திட்ட மதிப்பில் உச்ச வரம்பு இல்லை |
| மானியம் | • 35% மூலதன மானியம் – அதிகபட்சம் ரூ.150 இலட்சம்<br>• 6% வட்டி மானியம் |

இத்திட்டத்தின் கீழ் 2023–24 ஆம் ஆண்டில், 1,389 பட்டியலின / பழங்குடியினர் தொழில்முனைவோர்களாக உருவாக்கப்பட்டு ரூ.159.76 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.2. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## திட்டத்தின் சிறப்பம்சங்கள்:

| தகுதி வரம்பு | |
|---|---|
| வயது வரம்பு | பொது பிரிவினருக்கு 21 முதல் 45 வயது வரை சிறப்பு பிரிவினருக்கு 21 முதல் 55 வயது வரை |
| கல்வி தகுதி | குறைந்தபட்சம் மேல்நிலைப் பள்ளி கல்வி தேர்ச்சி |
| தகுதியுடையோர் | முதல் தலைமுறை தொழில்முனைவோர் |
| தகுதியுடைய தொழில்கள் | உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்கள் |
| திட்ட மதிப்பீடு | குறைந்தபட்சம் ரூ.10 இலட்சம் – அதிகபட்சம் ரூ.5 கோடி. |
| விண்ணப்பதாரரின் பங்களிப்பு | சிறப்பு பிரிவினருக்கு 5% மற்றும் பொது பிரிவினருக்கு 10%. |
| மானியம் | 25% மூலதன மானியம் – அதிகபட்சம் ரூ.75 இலட்சம்<br>3% வட்டி மானியம். |
| ஒதுக்கீடு | மகளிருக்கு 50%, பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கு 19%. |

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN) மூலம் 15 நாட்கள் இணைய வழி மூலம் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டப்பயிற்சி அளிக்கப்படுகிறது. நிதி நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற உதவி

செய்வதுடன், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன (Tamilnadu Small Industries Development Corporation Limited) தொழிற்பேட்டைகளில் மனைகள் / தொழிற்கூடங்கள் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டில், 877 தொழில்முனைவோர்களுக்கு ரூ.91.26 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.3 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

படித்த வேலையில்லா விளிம்பு நிலையில் உள்ள இளைஞர்கள் சுயதொழில்களை தொடங்குவதற்கு UYEGP திட்டத்தின் கீழ் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இந்த திட்டம் குறிப்பாக வர்த்தக அடிப்படையிலான குறு நிறுவனங்களுக்காக தமிழ்நாடு அரசால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

| தகுதி வரம்பு | |
|---|---|
| வயது வரம்பு | பொது பிரிவினருக்கு 18 முதல் 45 வயது வரை, சிறப்பு பிரிவினருக்கு 18 முதல் 55 வயது வரை. |
| கல்வி தகுதி | குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி. |
| தகுதியுடைய தொழில்கள் | வர்த்தகம் சார்ந்த தொழில்கள் மட்டும் |
| திட்ட மதிப்பீடு | அதிகபட்சம் ரூ.15 இலட்சம் |
| விண்ணப்பதாரரின் பங்களிப்பு | சிறப்பு பிரிவினருக்கு 5% மற்றும் பொது பிரிவினருக்கு 10% |
| மானியம் | 25% மானியம் – அதிகபட்சம் ரூ. 3.75 இலட்சம் |

2023–24 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 2,538 படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கு ரூ.28.14 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.2.4. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் சுய வேலைவாய்ப்பு திட்டமான பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் 2008 ஆம் ஆண்டு முதல் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

| தகுதி வரம்பு | |
|---|---|
| வயது வரம்பு | குறைந்தபட்சம் 18 ஆண்டுகள். உச்ச வயது வரம்பு இல்லை. |
| கல்வி தகுதி/திட்ட மதிப்பீடு | சேவைத்துறையின் கீழ் ரூ.5 இலட்சம் வரை மற்றும் உற்பத்தித்துறையின் கீழ் ரூ.10 இலட்சம் வரை – கல்வித் தகுதி தேவையில்லை. அதற்கு மேல் உள்ள திட்டங்களுக்கு – குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி அவசியம். |
| தகுதியுடைய தொழில்கள் | உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்கள் மட்டும். |

| | | |
|---|---|---|
| திட்ட மதிப்பீடு | சேவை சார்ந்த தொழில்களுக்கு – அதிகபட்சம் ரூ.20 இலட்சம் உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு – அதிகபட்சம் ரூ.50 இலட்சம். | |
| விண்ணப்பதாரரின் பங்களிப்பு | சிறப்பு பிரிவினருக்கு 5% மற்றும் பொது பிரிவினருக்கு 10%. | |
| மானியம் | நகர்ப்புறம் | கிராமப்புறம் |
| பொது பிரிவினர் | 15% | 25% |
| சிறப்பு பிரிவினர் (பட்டியலினத்தவர்/ பழங்குடியினர்/ இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சிறுபான்மையினர்/ பெண்கள்/ முன்னாள் படைவீரர்கள்/ மாற்றுத்திறனாளிகள்) | 25% | 35% |

2023–24 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.106.86 கோடி மானியத்துடன் 4,175 தொழில்முனைவோர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

## 2.2.5. பிரதம மந்திரியின் உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME)

ஒன்றிய அரசு திட்டமான பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம், ஒன்றிய அரசின் 60% மற்றும் மாநில அரசின் 40% நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது உணவுப்பதப்படுத்தும் குறு நிறுவனங்களை மேம்படுத்தவும் மற்றும் முறைப்படுத்தவும் பயன்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில், 2020 – 21 முதல் 2024–25 வரையிலான 5 ஆண்டு காலகட்டத்தில், ரூ.502.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## திட்டத்தின் சிறப்பம்சங்கள்:

| தகுதி வரம்பு | |
|---|---|
| தனிப்பட்ட அலகுகள் | • தகுதியான விண்ணப்பதாரர்கள்: தனிநபர்கள், உரிமையாளர் நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள்<br>• மானியம் 35% – அதிகபட்சம் ரூ.10 இலட்சம் |
| பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் | • தகுதியான விண்ணப்பதாரர்கள்: உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், சுய உதவி குழுக்கள் மற்றும் அரசு முகமைகள் |

| | |
|---|---|
| | • திட்ட மதிப்பீடு அதிகபட்சம் ரூ.10 கோடி<br>• மானியம் 35% – அதிகபட்சம் ரூ.3 கோடி<br>• தகுதியான செயல்பாடுகள்: பொது பதப்படுத்தும் வசதி, ஆய்வகங்கள், தொழில் காப்பகங்கள், கிடங்குகள், குளிர்பதனக் கிடங்கு போன்றவை. |
| சந்தைப்படுத்துதல் மற்றும் அடையாளப்படுத்தல் | • தகுதியான விண்ணப்பதாரர்கள்: உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் / சுய உதவி குழுக்கள் / கூட்டுறவு அல்லது பொதுவாக உருவாக்கபட்ட உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் சிறப்பு நோக்கு அமைப்பு<br>• திட்ட மதிப்பில் மானியம் 50% |
| ஆரம்ப மூலதனம் | சிறிய கருவிகள் மற்றும் மூலப்பொருட்கள் வாங்குவதற்கான மானியமாக உணவு சார்ந்த செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள |

| | |
|---|---|
| | சுய உதவிக் குழு உறுப்பினருக்கு ரூ.40,000 வரை. |
| திறன் மேம்பாடு | அனைத்து பயனாளிகளுக்கும் மற்றும் விண்ணப்பதாரர்கள் / ஆர்வலர்களுக்கான தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தயாரிப்பு சார்ந்த பயிற்சி. |
| பழங்குடியினருக்கான உணவு குழுமம் | தகுதியான விண்ணப்பதாரர்கள்: VDVK திட்டத்தில் பயன் பெற்ற பழங்குடியின உணவு பதப்படுத்தும் குழுமம்• ஒரு குழுவாக உருவாக்கப்பட்ட 2 VDVK அலகுகளின் விரிவாக்கத்திற்கு ரூ.10 லட்சம் மானியம் வழங்கப்படுகின்றன. |

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 12,070 தொழில்முனைவோர்களுக்கு கடன் உதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 230.67 கோடி மானியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை சிறப்புற

செயல்படுத்தியமைக்காக மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டது.

### 2.2.6. துப்புரவு தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் சிறப்பு முன்னெடுப்பு:

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், துப்புரவு பணியாளர்கள், தங்கள் கைகளால் கழிவுகளை அகற்றும் நிலையை அகற்றி, அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றி, இயந்திரமயமாக்கப்பட்ட கருவிகளைக் கொண்டு கழிவுநீர் வடிகால் பராமரிப்பு மற்றும் கழிவுநீர் தொட்டிகள் சுத்தம் செய்வதன் மூலம் அவர்களுக்கு பாதுகாப்பு, கண்ணியமான வேலை மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட உன்னதமான திட்டம் "துப்புரவு தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம்" ஆகும்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும்/பணிபுரிந்த, பட்டியலின / பழங்குடியினர் 2 கி.லி. மற்றும் 6 கி.லி. திறன் கொண்ட தனித்தன்மையோடு உருவாக்கப்பட்ட ஜெட்டிங் இயந்திரத்தை, வாங்குவதற்காக, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் மானிய விகிதம் 35% இருந்து 50% உயர்த்தப்பட்டது, இதர இனப் பயனாளிகளுக்கு, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வயது மற்றும் கல்வித் தகுதி அளவுகோல்கள் தளர்த்தப்பட்டு மானிய விகிதம் 25% இருந்து 40% உயர்த்தப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 213 பயனாளிகளுக்கு துப்புரவு கருவிகள் வாங்குவதற்காக ரூ.125.86 கோடி திட்டமதிப்பிலான கடன் ஆணைகளை 08.03.2024 அன்று நடைபெற்ற விழாவில் வழங்கினார்கள்

2023-2024 ஆம் ஆண்டில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 187 பயனாளிகளுக்கு ரூ.54.66 கோடி மானியமும், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 26 பயனாளிகளுக்கு ரூ.6.63 கோடி மானியமும் கூடுதலாக ஒதுக்கப்பட்டது. இதில், 84 பயனாளிகளுக்கு ரூ.24.17 கோடி மானியமும் 11 பயனாளிகளுக்கு ரூ.2.80 கோடி மானியமும் முறையே அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மற்றும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. மீதமுள்ள பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட மானியத்தொகையை விடுவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.3. புதிய மற்றும் இயக்கத்திலுள்ள நிறுவனங்களுக்கான மானியங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொடர்ச்சியான செயல்பாட்டிற்காக மூலதன மானியம், மின்சாரம், ஊதிய பட்டியல், முத்திரைத் தாள் மற்றும் பதிவுக் கட்டணம், தரச் சான்றிதழ்கள் பெறுதல் போன்ற இனங்களுக்கு பின்வரும் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மானியங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு எண்கள் 8.1, 8.3 மற்றும் 9.3 உடன் ஒத்துள்ளது.

### 2.3.1. முதலீட்டு மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில் முதலீட்டு மானியம் பின்வரும் வகைகளில் வழங்கப்பட்டுவருகிறது.

| மூலதன மானியத்தின் வகை | தகுதியுள்ள நிறுவனங்கள் | பயன்கள் |
|---|---|---|
| குறு உற்பத்தி நிறுவனங்களுக் கான முதலீட்டு மானியம் | • மாநிலத்தின் அனைத்து பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள்<br>• தொழில் விரிவாக்கம் மேற்கொள்ளும் குறு உற்பத்தி நிறுவனங்கள் | தகுதியான இயந்திர தளவாடங்கள் மதிப்பில் 25% முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.25 இலட்சம். |
| சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்களுக் கான முதலீட்டு மானியம் | • தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய ஊராட்சி ஒன்றிய பகுதிகள் மற்றும் அரசு தொழிற்பேட்டை களில் தொடங்கப்படும் புதிய மற்றும் தொழில் விரிவாக்கம் | தகுதியான இயந்திர தளவாடங்கள் மதிப்பில் 25% முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.150 இலட்சம். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்<br>• மாநிலத்தின் 388 ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தொடங்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர வேளாண்சார் உற்பத்தி நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் தொழில் விரிவாக்கம் மேற்கொள்ளும் நிறுவனங்கள். | |
| குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான கூடுதல் முதலீட்டு மானியம் | • மாநிலத்தின் அனைத்து பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள் | இயந்திர தளவாடங்கள் மதிப்பில் கூடுதலாக 10% முதலீட்டு மானியம், |

| | | |
|---|---|---|
| | மற்றும் தொழில் விரிவாக்கம் மேற்கொள்ளும் குறு உற்பத்தி நிறுவனங்கள் | அதிகபட்சமாக ரூ.5 இலட்சம். |
| சிறப்பு வகை தொழில் முனைவோருக்–கான கூடுதல் முதலீட்டு மானியம் (மகளிர், பட்டியலினத்தவர் / பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோரால் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்கள்) | • தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் மற்றும் அரசு தொழிற்பேட்டைகளில் தொடங்கப்படும் புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்<br>• மாநிலத்தின் 388 ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தொடங்கப்படும் சிறு மற்றும் நடுத்தர வேளாண்சார் | தகுதியான இயந்திர தளவாடங்–களின் மீதான முதலீட்டில் 5%, அதிகபட்சம் ரூ.5 இலட்சம். |

| | | |
|---|---|---|
| | உற்பத்தி மற்றும் உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள். | |
| மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் நிறுவனங் –களுக்கு கூடுதல் முதலீட்டு மானியம் | • மாநிலத்தின் அனைத்து பகுதியிலும் நிறுவப்படும் புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள்<br>• தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் மற்றும் அரசு தொழிற்பேட்டை களில் தொடங்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்<br>• மாநிலத்தின் 388 ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தொடங்கப்படும் | மாசற்ற மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் நிறுவனங் –களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25%, அதிகபட்சம் ரூ.10 இலட்சம். |

| | | |
|---|---|---|
| | சிறு மற்றும் நடுத்தர வேளாண்சார் உற்பத்தி மற்றும் உணவு பதப்படுத்துதல் நிறுவனங்கள். | |
| வளர்ச்சி அடையும் நிறுவனங்களுக் –கான கூடுதல் முதலீட்டு மானியம் | தொழில் விரிவாக்கம் மேற்கொள்ளும் போது குறு நிறுவனத்திலிருந்து சிறு நிறுவனமாக மற்றும் சிறு நிறுவனத்திலிருந்து நடுத்தர நிறுவனமாக வளர்ச்சி அடையும் உற்பத்தி தொழில் நிறுவனங்கள் | இயந்திர தளவாடங் –களின் மதிப்பில் 5% கூடுதல் முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.25 இலட்சம். |
| சிறப்பு வகை தொழில் நிறுவனங்களுக் –கான | மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் புதியதாக | தகுதியான இயந்திர தளவாடங் –களின் |

| | | |
|---|---|---|
| முதலீட்டு மானியம் | தொடங்கப்படும் சிறப்பு வகை குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில் விரிவாக்கம் மேற்கொள்ளும் சிறப்பு வகை குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் | மதிப்பில் 25% முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.150 இலட்சம். |

2023–2024 ஆம் ஆண்டில் 2,389 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.328.37 கோடி முதலீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.2 ஊதியப்பட்டியல் மானியம் (Pay Roll Subsidy)

20 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) க்கு நிறுவனத்தின் பங்களிப்புக்கு ஈடான தொகை ஆண்டொன்றுக்கு ஒரு ஊழியருக்கு

அதிகபட்சமாக ரூ.24,000/- வரை ஊதியப்பட்டியல் மானியமாக (Pay Roll Subsidy) முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டில், ஊதியப்பட்டியல் மானியமாக 99 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.16 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**2.3.3 குறைந்த அழுத்த மின் மானியம் (LTPT Subsidy)**

அனைத்து புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில் விரிவாக்கம் மேற்கொள்ளும் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து 36 மாதங்களுக்கு குறைந்த அழுத்த மின்கட்டணத்தில் 20% குறைந்த அழுத்த மின்மானியமாக வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டில், குறைந்த அழுத்த மின்மானியமாக 609 குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.4. பின்முனை வட்டி மானியம் (BEIS)

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் நடைமுறை மூலதன நிர்வாகத்தில் உதவுவதற்காக பின்முனை வட்டி மானியம் வழங்கப்படுகிறது. கடன் உத்தரவாத நிதி ஆதாரத்திட்டத்தின் கீழ் பெறப்படும் ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5% அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு 5 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது. அதேபோன்று குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்கள், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதலை மேற்கொள்ள ரூ.5 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5 ஆண்டுகளுக்கு 5% அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சம் வரை பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.

2023–2024 ஆம் ஆண்டில், பின்முனை வட்டி மானியமாக 897 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.7.92 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.5 ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மானியம் (PEACE)

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது ஆற்றல் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டமானது ஐக்கிய நாடுகள் சபையின் பின்வரும் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளுடன் இயைந்துள்ளது.

SDG 7.3: 2030–க்குள், ஆற்றல் திறனில் உலகளாவிய முன்னேற்ற விகிதத்தை இரட்டிப்பாக்குதல்; மற்றும்

SDG 7.a: 2030–க்குள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஆற்றல் திறன் மற்றும் மேம்பட்ட மற்றும் தூய்மையான புதைபடிவ எரிபொருள் தொழில்நுட்பம் உள்ளிட்ட சுத்தமான எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகலை எளிதாக்குவதற்கு சர்வதேச

ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஆற்றல் உள்கட்டமைப்பு மற்றும் சுத்தமான ஆற்றல் தொழில்நுட்பத்தில் முதலீட்டை மேம்படுத்துதல்.

இத்திட்டத்தின் கீழ், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை செலவில் 75%, அதிகபட்சம் ரூ.1.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ஆற்றல் தணிக்கையின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதை ஊக்கப்படுத்திட ஆற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக கொள்முதல் செய்யும் மாற்று இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களில் 50%, அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

2023–2024 ஆம் ஆண்டில், 210 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.05 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2.3.6. தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியம் (Q–cert)**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தரச்சான்றிதழ்களைப் பெறுவதற்கான ஆலோசனை மற்றும் சான்றிதழ்கள் கட்டணத்தில் 100%, தேசிய அளவிலான தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரையிலும் மற்றும் சர்வதேச அளவிலான தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது.

2023–2024 ஆம் ஆண்டில், 295 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.3.49 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2.3.7. முத்திரைத்தாள் வரி மற்றும் பதிவு கட்டண மானியம்**

பின்தங்கிய வட்டாரங்களில் தொடங்கப்படும் அனைத்து புதிய குறு மற்றும் சிறு நிறுவனங்களை நிறுவ தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், தொழிற் பயன்பாட்டிற்காக நிலம் வாங்க

செலுத்தப்பட்ட முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணங்களில் அனுமதிக்கப்பட்ட மதிப்பில் **50%** மானியமாக வழங்கப்படுகிறது.

**2023–2024** ஆம் ஆண்டில், **26** குறு, மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.**0.59** கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது

### 2.3.8. அறிவுசார் சொத்துரிமை பதிவிற்கான மானியம்

புத்தாக்கத்தின் வளர்ச்சி மாநிலத்தின் அறிவுசார் முதலீட்டின் குறியீடு ஆகும். தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளுக்கான காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் பிற அறிவுசார் சொத்துரிமைகளைப் பெறுவதை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் அமைந்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தங்களது காப்புரிமை பதிவுகளுக்கு, எந்த ஆவணமும் இன்றி ரூ.1 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் ஆவணங்களின்

அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட காப்புரிமை பெறுவதற்கான செலவினங்களில் 75%, அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது, வர்த்தக முத்திரை மற்றும் பதிவு செய்யப்பட்ட புவிசார் குறியீடுகள் பெறுவதற்கு ஆகும் செலவினங்களில் 50%, அதிகபட்சம் ரூ.25,000 வரை மானியமாக வழங்கப்படுகிறது.

**2023–2024 ஆம் ஆண்டில், 15 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.0.09 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.**

**2.3.9. பங்கு சந்தையில் நிதி திரட்டுவதற்கான மானியம்**

மாநிலத்தில் அதிக வளர்ச்சிக்கு சாத்தியமுள்ள உற்பத்தி மற்றும் சேவை தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆரம்ப பொது வெளியீடு (IPOs) மூலம் சமபங்கு மூலதனத்தை திரட்ட SME பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கு ஆகும் செலவில் 75%, அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

**2023–2024 ஆம் ஆண்டில், 3 சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.0.89 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.**

## 2.3.10. குறுங்குழும மேம்பாட்டு திட்டம் (MCDP)

குறுங்குழும மேம்பாட்டுத் திட்டமானது குறு நிறுவனங்களின் வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு, 2022–2023 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, ஊரக வேலை வாய்ப்பினை உருவாக்குவதுடன், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கியுள்ள மக்களின் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.

இத்திட்டம் தொழில் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 43 குறுங்குழுமங்களுக்கு ரூ.161.39 கோடி மானியத்துடன், ரூ.203.95 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு

ஒப்புதல் வழங்கப்பட்டு இப்பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளது. விவரங்கள் பின்வருமாறு:

**(ரூ.கோடியில்)**

| **வ. எண்** | **குழுமம் மற்றும் மாவட்டத்தின் பெயர்** | **செயல்படுத்தும் முகமை** | **மொத்த திட்ட மதீப்பீடு** | **தமிழக அரசின் மானியத் தொகை** |
|---|---|---|---|---|
| 1. | முந்திரி பதப்படுத்துதல் குழுமம், கடலூர் | தொழில் வணிக ஆணையரகம் | 2.16 | 1.81 |
| 2. | பொள்ளாச்சி கயிறு குழுமம், கோயம்புத்தூர் | தொழில் வணிக ஆணையரகம் | 8.80 | 6.60 |
| 3. | உடுமலைப் பேட்டை கயிறு குழுமம், திருப்பூர் | தொழில் வணிக ஆணையரகம் | 6.92 | 6.23 |
| 4. | விளாச்சேரி பொம்மை குழுமம், மதுரை | தொழில் வணிக ஆணையரகம் | 4.03 | 3.63 |
| 5. | தூத்துக்குடி ஆகாயத் தாமரை குழுமம், தூத்துக்குடி | தொழில் வணிக ஆணையரகம் | 2.02 | 2.02 |
| 6. | நரிக்குறவர் பாசி மணி குழுமம், காஞ்சிபுரம் | தொழில் வணிக ஆணையரகம் | 2.45 | 2.45 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | பேராவூரணி கயிறு குழுமம், தஞ்சாவூர் | தொழில் வணிக ஆணையரகம் | 7.29 | 5.84 |
| 8. | அமராவதி பேப்பர் போர்டு குழுமம், கரூர் | தொழில் வணிக ஆணையரகம் | 7.03 | 5.29 |
| 9. | சேலம் நுண்ணூட்ட சத்து குழுமம், சேலம் | தொழில் வணிக ஆணையரகம் | 7.14 | 5.35 |
| 10. | நகை உற்பத்தியாளர் கூட்டமைப்பு குழுமம், இராமநாதபுரம் | தொழில் வணிக ஆணையரகம் | 6.71 | 6.08 |
| 11. | கோவில்பட்டி பார்வையற்றோர் குறுந்தொழில் குழுமம், தூத்துக்குடி | தொழில் வணிக ஆணையரகம் | 0.59 | 0.59 |
| 12. | நெல்லை சமையல் பாத்திரங்கள் குழுமம் திருநெல்வேலி | தொழில் வணிக ஆணையரகம் | 6.05 | 4.55 |
| 13. | தம்மம்பட்டி மர வேலைப்பாடு குழுமம், சேலம் | தொழில் வணிக ஆணையரகம் | 4.10 | 3.70 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | கிருபானந்த வாரியார் விசைத்தறி குழுமம், தருமபுரி | தொழில் வணிக ஆணையரகம் | 2.98 | 2.25 |
| 15. | தையல் குழுமம், தென்காசி | தொழில் வணிக ஆணையரகம் | 1.15 | 1.04 |
| 16. | தேன் பிரித்தெடுக்கும் குழுமம், வேலூர் | தொழில் வணிக ஆணையரகம் | 1.04 | 0.94 |
| 17. | கோயம்புத்தூர் பாக்கு மட்டை தட்டுகள் குழுமம், கோயம்புத்தூர் | தொழில் வணிக ஆணையரகம் | 6.90 | 5.18 |
| 18. | வேலூர் மண்பாண்டங்கள் குழுமம், வேலூர் | தொழில் வணிக ஆணையரகம் | 2.45 | 2.21 |
| 19. | வெஸ்டர்ன் கார்ட்ஸ் கயிறு குழுமம், விருதுநகர் | தொழில் வணிக ஆணையரகம் | 7.19 | 5.40 |
| 20. | மகளிர் நெசவாளர் குழுமம், விருதுநகர் | சிட்கோ | 3.77 | 3.39 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | அலுமினியம் அச்சு வார்ப்பு குழுமம், கோயம்புத்தூர் | சிட்கோ | 5.73 | 4.30 |
| 22. | உப்பு குழுமம், தூத்துக்குடி | சிட்கோ | 4.26 | 3.84 |
| 23. | வெப் ஆப்செட் அச்சு குழுமம், மதுரை | சிட்கோ | 6.53 | 4.89 |
| 24. | மகளிர் ஆயத்த ஆடை குழுமம், மதுரை | சிட்கோ | 3.91 | 3.52 |
| 25. | உணவுக் குழுமம், கன்னியாகுமரி | சிட்கோ | 6.65 | 5.99 |
| 26. | உணவு பதப்படுத்தும் குழுமம், நாமக்கல் | சிட்கோ | 8.20 | 6.56 |
| 27. | ஜமுக்காளம் குழுமம், பவானி, ஈரோடு | சிட்கோ | 6.93 | 6.25 |
| 28. | அச்சுக் குழுமம், விழுப்புரம் | சிட்கோ | 6.70 | 5.04 |
| 29. | நவீன புகைப்பட குழுமம், செங்கல்பட்டு | சிட்கோ | 6.30 | 4.73 |

| | | | | |
|---|---|---|---|---|
| 30. | செயற்கைப் பட்டு நூல் குழுமம், தேனி | சிட்கோ | 5.24 | 3.67 |
| 31. | செக்காணூரணி பெண்கள் மரப்பொருட்கள் குழுமம், மதுரை | சிட்கோ | 5.39 | 4.85 |
| 32. | வெஸ்டர்ன் காட்ஸ் காபி குழுமம், திண்டுக்கல் | சிட்கோ | 6.55 | 4.58 |
| 33. | நெடுமரம் பனையோலை குழுமம், சிவகங்கை | சிட்கோ | 0.37 | 0.28 |
| 34. | ஆயத்த ஆடை வாழ்வாதார மையம் மினி குழுமம், சிவங்கை | சிட்கோ | 1.13 | 0.79 |
| 35. | செராமிக் குழுமம், விருத்தாசலம், கடலூர் | சிட்கோ | 2.42 | 2.00 |
| 36. | சிறகுகள் ஆயத்த ஆடை உற்பத்தியாளர் குறுங்குழுமம், விருதுநகர் | சிட்கோ | 0.34 | 0.25 |

| | | | | |
|---|---|---|---|---|
| 37. | சித்தா மூலிகை மருந்துப் பொருட்கள் உற்பத்தி குறுங்குழுமம், அச்சரப்பாக்கம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு | சிட்கோ | 1.47 | 1.03 |
| 38. | ஆயத்த ஆடை குறுங்குழுமம், அழகிய பாண்டிபுரம், கன்னியாகுமரி | சிட்கோ | 3.48 | 2.44 |
| 39. | கொண்டலாம் –பட்டி பட்டு நூல் குழுமம், சேலம் | சிட்கோ | 7.32 | 5.49 |
| 40. | துணிநூல் வார்ப்பு குறுங்குழுமம், கத்தேரி கிராமம், சங்ககிரி வட்டம், நாமக்கல் | சிட்கோ | 8.97 | 4.49 |

| | | | | |
|---|---|---|---|---|
| 41. | ஆயத்த ஆடை உற்பத்தி குறுங்குழுமம், ராங்கியம் கிராமம், திருமயம் வட்டம், புதுக்கோட்டை | சிட்கோ | 0.35 | 0.28 |
| 42. | மஞ்சள்தூள் உற்பத்தி செய்யும் குறுங்குழுமம், ஈரோடு | சிட்கோ | 7.39 | 5.54 |
| **மொத்தம்** | | | **203.95** | **161.39** |

## 2.4. இதர முக்கிய முன்னெடுப்புகள்

### 2.4.1 தமிழ்நாடு ஒற்றை சாளர தகவு (TNSWP)

தொழில் முதலீட்டாளர்கள் எவ்வித சிரமமும் இன்றி அரசு நிறுவனங்களால் வழங்கப்படும் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு குடையின் கீழ் பெற்றிட தமிழ்நாடு

ஒற்றை சாளர தகவு 2.0 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜீலை 2021–ல் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்பொழுது **40–க்கும்** அதிகமான அரசுத்துறைகள் / நிறுவனங்களால் வழங்கப்படும் **200–க்கும்** அதிகமான சேவைகளை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த தகவு தமிழ்நாட்டில் முதலீட்டாளர்கள் எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்துகிறது.

**2023–2024** ஆம் ஆண்டில், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட **22,391** விண்ணப்பங்களில், **21,557** விண்ணப்பங்களுக்கு தமிழ்நாடு ஒற்றைச்சாளர தகவு வழியாக தீர்வு காணப்பட்டுள்ளது.

### 2.4.2 தமிழ்நாடு தொழில் தரவுத்தளம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தடையற்ற சேவைகளை வழங்கும் நோக்கில், தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் முகமையுடன் (**FaMeTN)**

ஒருங்கிணைந்து தமிழ்நாடு தொழில் தரவுத்தளம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தத் தரவுத்தளம் தமிழ்நாடு அரசின் முக்கியத் துறைகளின் தரவுகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்த வழங்குவதோடு மட்டுமல்லாமல் பெரிய தொழில் நிறுவனங்களின் அனைத்து தேவைகளுக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது சேவைகளை இணைக்க உதவும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கொள்கைசார் முடிவுகளை எடுக்க இந்த தரவுத்தளம் உதவிகரமாக இருக்கும்.

### 2.4.3. கடன் ஆலோசகர்கள் (Credit Mentors) மற்றும் ஆண்டு கடன் திட்டம்

தமிழ்நாடு அரசால் நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர கடன் திட்டத்தின் இலக்கீடுகளுக்கு ஏற்ப, துறையின் பல்வேறு திட்டங்களின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கு வங்கிகளிலிருந்து கடன்களை எளிதாக கிடைத்திட கடன் ஆலோசகர்கள் அனைத்து மாவட்டங்களிலும்

நியமிக்கப்பட்டுள்ளனர். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வங்கிகளால் வழங்கப்படும் கடன் இலக்கினை அடைய மாவட்டங்கள் தோறும் கடன் வசதியாக்கல் முகாம்கள் நடத்தப்படுகின்றன.

### 2.4.4. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கல் குழுக்கள்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கு பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட பிற நிறுவனங்களிடமிருந்து பட்டியல் தொகையினை பெறுவதில் தாமதம் ஏற்படுவதால் நிறுவனங்களின் நடைமுறை மூலதனம் பாதிப்படைகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம்–2006–இன் படி குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பட்டியல் தொகையை பெறுவதில்

ஏற்படும் தாமதத்திற்கு தீர்வு காணும் வகையில் தமிழ் நாடு அரசு, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில், 57 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.68.19 கோடி மதிப்பில் 434 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

### 2.4.5. ஏற்றுமதி மையங்கள்

ஏற்றுமதி ஊக்குவிப்பு நிதி வழங்க பின்வரும் முன்மொழிவுகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது

- ஆம்பூரில் தோல் பரிசோதனை கூடம் அமைத்தல்.
- மதுரையில் மேம்பட்ட உணவுப் பரிசோதனைக் கூடம் நிறுவுதல்.

- கோயம்புத்தூரில் மின்சார வாகன (EV) மோட்டார் சோதனைக்கான பொது வசதி மையம் (CFC) நிறுவுதல்.

ஏற்றுமதி ஊக்குவிப்பு நிதியிலிருந்து ரூ.26.60 கோடி மானியம் மேற்கூறிய மூன்று திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 2.4.6. நான் முதல்வன் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்குதல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் திறன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, துறையின் உதவியுடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் "நான் முதல்வன்" தகவில் இணைக்கப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக 31.03.2024 வரை, 976 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 4,269 பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

### 2.4.7. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர் மற்றும் வங்கியாளர்களுக்கான விருதுகள்

தமிழ்நாடு அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை கருதியும் அந்நிறுவனங்கள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பினை ஊக்குவிக்கும் வகையிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் அந்நிறுவனங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் வங்கிகளுக்கும் ஆண்டுதோறும் "முதலமைச்சர் விருதுகள்" வழங்கி ஊக்குவித்து வருகிறது. இந்த விருதுகளுக்கு விண்ணப்பித்தல், விண்ணப்பங்களை பரிந்துரைத்தல் மற்றும் இறுதி பட்டியல் வெளியிடல் ஆகிய அனைத்தும் இணையதளம் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பின்வரும் விருதுகள் சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்

நிறுவனங்கள் தினம் ஜுன் 27 அன்று ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

1. மாநில அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருது.
2. மாநில அளவிலான சிறந்த மகளிர் தொழில்முனைவோர் விருது.
3. மாநில அளவிலான வேளாண் சார்ந்த தொழில்களுக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது.
4. மாநில அளவிலான தரம் மற்றும் ஏற்றுமதிக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது.
5. மாநில அளவிலான சிறந்த சிறப்பு பிரிவினர் தொழில்முனைவோர் விருது
6. மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அதிக அளவில் கடன் வழங்கும் முதல் மூன்று வங்கிகளுக்கு விருது.
7. மாவட்ட அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருதுகள்.

### 2.4.8. பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தினம் – 2023

பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 27 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 2023 ஜூன் 26, 27 அன்று சென்னை வர்த்தக மையத்தில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், 2,000 க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கான துறை வாரியான அரங்குகள், முக்கிய திட்டங்கள் மற்றும் தொழிற்பேட்டைகளின் துவக்கம், அறிவுசார் அமர்வுகள் மற்றும் தொழில்முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான வருடாந்திர விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு அரசின்

முன்னோடித்திட்டமான **அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள்** திட்டம் (AABCS) தொடங்கப்பட்டு முதல் 100 பயனாளிகளுக்கு கடன் ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டன.

### 2.4.9. தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு – 2024 (TNGIM 2024)

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024–ன் ஒரு பகுதியாக, மாவட்ட தொழில் மையங்கள் மூலம் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் மாவட்ட முதலீட்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இந்த மாநாடுகளின் விளைவாக, 5,068 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ரூ.63,573.11 கோடி முதலீட்டினை ஈர்க்கும் வகையில் கையொப்பமிடப்பட்டன.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக, சிறு தொழில் நிறுவனங்கள் ரூ.38,811 கோடியும், நடுத்தர நிறுவனங்கள் ரூ.22,609 கோடியும் மற்றும் குறு நிறுவனங்கள் ரூ.2,152 கோடியும் முதலீடு செய்ய

இசைவு தெரிவித்தனர். முதன்மையான மூன்று துறைகளான வேளாண் மற்றும் உணவுப் பதப்படுத்துதல், ஜவுளி உற்பத்தி மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் மூலமாக அதிகப்படியான முதலீடுகள் ஈர்க்கப்பட்டது. இந்த முதலீடுகளின் மூலம் மாநிலம் முழுவதும் சுமார் இரண்டரை இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.5. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

மாநிலத்தின் கிராமப்புற கைவினைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் வேலையாட்களுக்கு தொடர்ச்சியான மற்றும் லாபகரமான வேலைவாய்ப்பை வழங்குவதற்கும், பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், தொழிற் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டன.

தற்பொழுது தொழில் வணிகத் துறையின் நிர்வாகத்தின் கீழ் (31.03.2024–இன்படி), 269 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 1983–இன்படி, தொழில் வணிக ஆணையர், இச்சங்கங்களின் மாநில பதிவாளர் ஆவார். இச்சங்கங்கள் தென்னை நார், ஒப்பந்த தொழிலாளர்கள், அச்சிடுதல், தேயிலை, கைவினைப்பொருட்கள், தொழிற்பேட்டைகள், இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம் போன்ற பலதரப்பட்ட வணிகங்களில் ஈடுபட்டுள்ளன. இந்த சங்கங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை, இண்ட்கோசர்வ், சேகோசர்வ் மற்றும் தாய்கோ வங்கி ஆகியன நிர்வாக இயக்குனர்/தலைமை நிர்வாக அதிகாரியின் தலைமையில் இச்சங்கங்கள் இயங்குகின்றன.

தொழிற் கூட்டுறவு சங்கங்களின் விவரம் பின்வருமாறு:

(ரூ.கோடியில்.)

| வ. எண் | வணிகம் | சங்கங்களின் எண்ணிக்கை | ஆண்டு விற்று முதல் (31.03.2024 –ன் படி) |
|---|---|---|---|
| 1 | சேகோ | 2 | 632.93 |
| 2 | ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை | 28 | 349.74 |
| 3 | தேயிலை | 18 | 159.46 |
| 4 | அச்சு | 30 | 46.88 |
| 5 | கயிறு | 61 | 19.79 |
| 6 | ஆட்டோ மற்றும் டாக்ஸி | 16 | 17.47 |
| 7 | பொறியியல் | 15 | 10.71 |
| 8 | தையல் | 12 | 4.46 |
| 9 | பாலிதீன் | 6 | 3.15 |
| 10 | தீப்பெட்டி | 6 | 2.56 |
| 11 | கைவினைப் பொருட்கள் | 14 | 2.19 |
| 12 | உலோகம் | 7 | 1.71 |
| 13 | செங்கல் | 5 | 1.09 |
| 14 | தொழிற் –பேட்டைகள் | 11 | 0.93 |

| | | | |
|---|---|---|---|
| **15** | இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம் | 1 | 3.90 |
| **16** | இதர சங்கங்கள் | 37 | 51.13 |
| | **மொத்தம்** | **269** | **1308.10** |

2023–2024 ஆம் ஆண்டில், தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ரூ.1,308.10 கோடி விற்பனையை எய்தியுள்ளது. 269 சங்கங்களில், 193 சங்கங்கள் இலாபத்துடன் செயல்பட்டு ரூ.50.15 கோடி இலாபம் ஈட்டியுள்ளன. இந்த ஆண்டில் அனைத்து சங்கங்களிலும் உள்ள 4,979 தொழிலாளர்களுக்கு ஊதியமாக ரூ.272.61 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**2.5.1. இண்ட்கோசர்வ்**

தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு (INDCOSERVE) 1965 இல் நிறுவப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் 24,000 உறுப்பினர்களுடன் 16

தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை (ICTFs) உள்ளடக்கிய இண்ட்கோசர்வ், நாட்டிலேயே மிகப் பெரிய தேயிலை கூட்டுறவு கூட்டமைப்பு ஆகும்.

இண்ட்கோசர்வால் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- இண்ட்கோசர்வ் ஆனது நபார்டு நிதியுதவி மூலம் அதன் 15 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை இரண்டு கட்டங்களாக நவீனமயமாக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கட்டம் I–ன் கீழ் 5 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் நவீனமயமாக்கல் பணி நிறைவடைந்துள்ளது. கட்டம் II–ன் கீழ் 10 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கான மீதமுள்ள பணிகள் 30.09.2024–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இண்ட்கோ தேயிலையை பிரபலப்படுத்தவும், சந்தைப்படுத்தவும், இண்ட்கோசர்வ் தமிழ்நாடு அரசின் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (SADP) உதவியுடன், மொத்தம் ரூ.3.09 கோடியில் 20 இண்ட்கோ தேயிலை வண்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் தேயிலை வண்டிகளில் இண்ட்கோ தேனீர் விற்பனை செய்வது மட்டுமின்றி தேன், நெல்லிக்காய் மற்றும் உள்ளூர் சிற்றுண்டிகளையும் விற்பனை செய்து, பழங்குடியின மக்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கி வருகிறது.
- இண்ட்கோசர்வ் பொதுமக்களுக்கு இண்ட்கோ தேனீர் மற்றும் சிற்றுண்டிகளை வழங்கும் சிற்றுண்டிச்சாலைகளாக இண்ட்கோ தேயிலை இல்லங்களை நடத்துகிறது. தற்போது தமிழ்நாடு

முழுவதும் 11 இண்ட்கோ தேயிலை இல்லங்கள் இயங்கி வருகின்றன.

- இண்ட்கோசர்வ், குன்னூர், துடியலூர் மற்றும் கொச்சியில் உள்ள கிடங்குகள் மூலம் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டான்டீ மூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கான கிடங்கு வசதிகளை வழங்குகிறது. இதன் மூலம் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.0.98 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில், இண்ட்கோசர்வ், தமிழ்நாடு முழுவதும் உள்ள பொதுவிநியோக கடைகளுக்கு 2,616 மெட்ரிக் டன் தேயிலைத் தூளை வழங்கியுள்ளது. இதன் மூலம் ரூ.59.07 கோடி வருவாய் ஈட்டி, ரூ.8.05 கோடி லாபம் ஈட்டியுள்ளது.
- நீலகிரி தேயிலை ஏல மையம் (NTAC), (முன்பு TEASERVE), தேயிலை விற்பனையை மின்னணு ஏலம் மூலம் செயல்படுத்தி வருகின்றது.

2023–24 ஆம் ஆண்டில், NTAC 7,885 மெட்ரிக் டன் தேயிலைத் தூளை விற்று, ரூ.69.05 கோடி வருவாய் ஈட்டி, ரூ.17.43 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளது.

- 2023–2024 ஆம் ஆண்டில், 16 தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் தங்கள் உறுப்பினர்களிடமிருந்து 43,342 மெட்ரிக் டன் பசுந்தேயிலை இலைகளை கொள்முதல் செய்து 11,312 மெட்ரிக் டன் தேயிலைத் தூள் உற்பத்தி செய்து ரூ.99.69 கோடிக்கு விற்பனை செய்தன.

### 2.5.2 சேகோசர்வ்

சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (சேகோசர்வ் என அறியப்படுகிறது) 1981–ல் நிறுவப்பட்டது. ஜவ்வரிசி உற்பத்தியாளர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துதலில் இடைத்தரகர்களை நீக்குதல் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு கிடங்கு வசதிகளை வழங்குதல்

மற்றும் அவர்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றது.

ஜவ்வரிசி உற்பத்தியின் தரத்தை மேம்படுத்த, சேகோசர்வ் ஆய்வகத்தை 2024-25 ஆம் ஆண்டுக்குள் FSSAI-NABL ஒருங்கிணைந்த தரநிலைக்கு மேம்படுத்துவதுடன், நிலையான இயக்க செயல்முறையினை (SOP) செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேகோசர்வ், "சேலம் சேகோ (ஜவ்வரிசி)" என ஜவ்வரிசிக்கு புவிசார் குறியீடு (GI) பெற்றுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில், சேகோசர்வ் ரூ.632.89 கோடி விற்பனை விற்றுமுதல் செய்து, ரூ.3.84 கோடி நிகர இலாபத்தை ஈட்டியுள்ளது.

### 2.5.3. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (TAICO வங்கி) 1961 இல் தொழில்துறை கூட்டுறவு

சங்கங்களுக்கு நிதி உதவி வழங்க நிறுவப்பட்டது. TAICO வங்கியானது, அதன் வங்கிச் செயல்பாடுகளை தனிநபர்கள், MSMEக்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கான அனைத்து வகையான கடன்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகையை பெறுவதுடன் அவர்களின் நடப்பு மற்றும் சேமிப்பு கணக்குகளை இயக்குவது உட்பட மாநிலம் முழுவதும் உள்ள TAICO வங்கியின் அனைத்து 47 கிளைகளும் மைய வங்கி தீர்வுகள் வாயிலாக RTGS, NEFT மற்றும் மொபைல் பேங்கிங் சேவைகளை வழங்கி வருகிறது.

TN TREDS தளத்தில் தமிழ்நாடு பொதுத்துறை நிறுவனங்களுக்கு முதன்மை வங்கியாக TAICO வங்கி செயல்படுகிறது மேலும் 31.03.2024 வரை பிற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து 900க்கும் மேற்பட்ட MSME நிறுவனங்களுக்கு ரூ.1,891 கோடி அளவுக்கு கடன் வசதிகளைப் பெற வழிவகை செய்துள்ளது.

TAICO வங்கி பின்வரும் திட்டங்களின் கீழ் MSME நிறுவனங்களுக்கு நிதி உதவியை வழங்குகிறது.

- SIDCO தொழில் மனைகள் வாங்குவதற்கு SIDCO பயனாளிகளுக்கான FLY MSME திட்டம்,
- NEEDS போன்ற அரசு நிதியுதவி திட்டங்கள்.
- MSME நிறுவனங்களுக்கு மூலதனக் கடன் மற்றும் TIIC மூலமாக காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன

2023–24 ஆம் ஆண்டில், TAICO வங்கி ரூ.1,056.24 கோடி டெபாசிட்களைத் திரட்டியுள்ளது, ரூ.578.03 கோடிக்கு கடன்கள் மற்றும் முன்பணங்களை நீட்டித்துள்ளது மற்றும் நிகர லாபமாக ரூ.13.10 கோடி ஈட்டியுள்ளது.

### 2.5.4. இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம்

இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம் 22.12.1978 இல் பதிவு செய்யப்பட்டு அதன் வணிக நடவடிக்கைகள் 19.01.1979 முதல் செயல்படத் தொடங்கியது. தற்போது, ரூ.37.61 லட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் 339 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த சங்கம் பாம்புகளிடமிருந்து நஞ்சை எடுத்து, பாம்பு கடிக்கு எதிரான விஷமுறிவு மருந்து தயாரிப்பதற்காக ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மருந்து ஆய்வகங்களுக்கு விற்பனை செய்கிறது.

இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்களின் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துவதன் மூலம் தொடர்ச்சியான வேலைவாய்ப்பை வழங்குவதே சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

2023–2024 ஆம் ஆண்டில், இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம் 1659.30 கிராம் நஞ்சினை விற்றதன் மூலம் ரூ.681.00 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

## 2.6. ஆய்வகங்கள் மற்றும் சோதனை மையங்கள்:

### 2.6.1. மத்திய மின் பொருள் பரிசோதனைக் கூடம் (CETL)

மத்திய மின் பரிசோதனைக் கூடம் (CETL), காக்களூர் 1973 ஆம் ஆண்டு முதல் தொழில் வணிக ஆணையரின் கீழ் இயங்கி வரும் ஆய்வகம் ஆகும். இது சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தால் (NABL) அங்கீகாரம் பெற்றது. இந்திய தர கவுன்சிலின் கீழ் உள்ள தொகுதி வாரியம் மற்றும் இந்திய தரநிலைகள் பணியகத்தால் (BIS), இந்திய அரசாங்கத்தின் நுகர்வோர் விவகார அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வாய்வகம், மின்சார தயாரிப்புகளை சோதிப்பதில் 2 நாள் பயிற்சி திட்டத்தையும் வழங்குகிறது, மேலும் 31.03.2024 வரை பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 499 பணியாளர்கள் பயிற்சியின் மூலம் பயனடைந்துள்ளனர். CETL 2023-2024 ஆம் ஆண்டில் 982 மாதிரிகளை பரிசோதித்ததன் மூலம் ரூ.42.60 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

### 2.6.2. வேதியியல் ஆய்வகங்கள்

சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடியில் இரசாயன பரிசோதனை ஆய்வகங்கள் உள்ளன. இரசாயனம், உலோகம் மற்றும் பிற தொழில்கள், அரசுத் துறைகள், பெருநிறுவனங்கள் மற்றும் தனியார் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மூலப்பொருள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சோதனை செய்வதற்குத் தேவையான நவீன கருவிகளுடன் இந்த 5 மண்டல சோதனை ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன.

2023–2024 ஆம் ஆண்டில், 99,434 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு, ரூ.4.57 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

## 2.6.3. சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வகம் (MICAL), சென்னை

மருந்து உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் தயாரிக்கப்படும் மருந்துப்பொருட்களின், பகுப்பாய்வு மற்றும் சோதனைகளை மேற்கொள்வதற்காகவும் அவை பரிந்துரைக்கப்பட்ட தரங்களுக்கு பொருந்தியுள்ளனவா எனச் சான்றளிக்கவும், 1964ம் ஆண்டில் சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வகம் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் சென்னையில் உள்ளது. மேலும் ISO சான்று பெற்ற கிளை குன்னூரில் இயங்கி வருகிறது.

2023–2024 இல் இவ்வாய்வகம் 1776 மாதிரிகளை பரிசோதித்து, ரூ.17.58 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

### 2.6.4. தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்கள்

பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்கள் ஆணையரகத்தின் கீழ் செயல்படுகின்றன:

i. பீங்கான் தொழில் நுட்பவியலில் மூன்றரை ஆண்டு பட்டயப் பயிற்சி வழங்கும் பீங்கான் தொழில் நுட்பக்கல்லூரி, விருத்தாச்சலம்

ii. கருவி மற்றும் அச்சு பொறியியல் மற்றும் குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியலில் மூன்றாண்டு பட்டயப் பயிற்சி வழங்கும் அரசு தொழில் நுட்ப பயிற்சி மையம், கிண்டி, சென்னை

iii. கருவி மற்றும் அச்சு பொறியியலில் மூன்றாண்டு பட்டயப்பயிற்சி வழங்கும் கருவி பொறியியல் பயிலகம் திண்டுக்கல்,

iv. கண்ணாடி ஊதும் செயல்முறை பயிற்சி வழங்கும் அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

v. ஆய்வக கண்ணாடி பொருட்களை தயாரித்து வரும் அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்.

## 2.7. தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TANCOIR)

தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் தென்னை நார் பொருட்களின் மதிப்புக்கூட்டுதல் மற்றும் தர மேம்பாடு ஆகியவற்றினை உறுதி செய்யவும் மற்றும் தென்னை நார் பொருட்களுக்கான உள்நாடு மற்றும் பன்னாட்டு சந்தைகளுக்கான அணுகலை எளிதாக்குவதற்காகவும் பிரிவு 8 நிறுவனமாக தமிழ்நாடு அரசால் 2022 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இந்நிறுவனம், தென்னை நார் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக கே.பரமத்தி மற்றும் குண்டடம் ஆகிய இரண்டு குழுமங்களை செயல்படுத்தும் முகமையாக செயல்படுவதுடன் பேராவூரணி,

உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி மற்றும் வத்திராயிருப்பு குழுமங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வர தேவையான உதவிகளையும் சேவைகளையும் வழங்கிவருகிறது. இக்குழுமங்களின் மொத்தத் திட்ட மதிப்பீடு ரூ.51.08 கோடி மற்றும் அரசு மானியம் ரூ.37.81 கோடி ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு தென்னை நார் கொள்கை, 2024, 04.01.2024 அன்று வெளியிடப்பட்டது. இந்த கொள்கை தென்னை நார் பொருட்களுக்கான தயாரிப்பு பல்வகைப்படுத்தல், மதிப்பு கூட்டல், உள்நாடு மற்றும் சர்வதேச சந்தை அணுகல், ஒத்துழைப்பு, ஏற்றுமதி ஊக்குவிப்பு போன்றவற்றை முன்னிலைப்படுத்துகிறது.

13 தென்னை நார் குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், கான்கிரீட் உலர்தளம், பசுமை குடில், இயந்திர உலர்த்திகள் மற்றும் மாசு கட்டுப்பாட்டு உபகரணங்கள் நிறுவுதல் ஆகியவற்றிற்காக ரூ.2.15 கோடி மதிப்பிலான மானியங்களைப்

பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.8. தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx)

தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழிலில் முதலீடுகளை ஊக்குவிப்பது மற்றும் வேளாண் விளைபொருட்கள் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பது ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) நிறுவப்பட்டுள்ளது. TNAPEx, நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 8–ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும்.

அறுவடை பின்சார் விளை பொருட்களின் சேதத்தை குறைப்பது, உணவு பதப்படுத்தும் மற்றும் மதிப்புகூட்டும் தொழிற்கூடங்களை ஊக்குவிப்பது,

வேளாண் விளை பொருள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவது, அறுவடை பின்சார் தொழில் நுட்பங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள கட்டமைப்புகளின் பயன்பாட்டை அதிகரிப்பது மற்றும் உணவு பதப்படுத்தும் துறையில் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மையாக்குவது ஆகிய பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

### 2.8.1. TNAPEx, 2023–24 ஆம் ஆண்டில் மேற்கொண்ட செயல்பாடுகள்:

**விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள்:**

e–Commerce கருத்தரங்கு, B2B நிகழ்வு, உழவர்களுக்கான வேளாண் சார்ந்த கருத்தரங்குகள் உள்ளிட்ட 53 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை TNAPEx நடத்தியுள்ளது. இந்நிகழ்ச்சிகளின் பலன்கள் சுமார் 2,400க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் 600 முனைவோர்களைச் சென்றடைந்துள்ளது. மேலும் இது போன்ற நிகழ்வுகளின் வாயிலாக உழவர்

உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் MSMEக்களை ONDC இணையத்தளத்தில் இணைத்துள்ளது. கூடுதலாக, 20–க்கும் மேற்பட்ட FPOக்கள் மற்றும் MSME–க்கள் புதிய ஏற்றுமதியாளர்களாக TNAPEx–இன் பல்வேறுபட்ட முயற்சிகளால் முன்னேற்றப்பட்டுள்ளனர். B2B நிகழ்வுகள் மூலம், 45 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழிற்நிறுவனங்களை ஏற்றுமதியாளர்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிகழ்ச்சிகளின் மூலமாக ஏற்றுமதிக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் ஏற்றுமதி சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் MSMEக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**அறுவடை பின்சார் தொழில் கட்டமைப்புகள் செயலி:**

தமிழ் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள அறுவடை பின்சார் தொழிற்கூடங்கள், உணவுபரிசோதனை ஆய்வகங்கள், முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள்,

குளிர் சாதன கிடங்குகள் மற்றும் இவை சார்ந்த உள்கட்டமைப்புகளை TNAPEx வரைபடமாக்கியுள்ளது. இக்கட்டமைப்புகளைப் பற்றிய விவரங்களை விவசாய பெருமக்களும், இதர பயனாளர்களும் எளிதில் தெரிந்து கொள்ளவும் அவற்றை தங்கள் தேவைக்கு ஏற்றபடி பயன்படுத்திக் கொள்ளவும் TNAPEx செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

**உணவு பகுப்பாய்வு ஆய்வகங்களை உருவாக்குதல்:**

வேளாண் உணவு பொருட்களின் ஏற்றுமதி தரத்தினை உறுதி செய்யவும் மற்றும் ஏற்றுமதி தரச்சான்றிதழை பெறவும், உயர்தர உணவுபரிசோதனை ஆய்வகமானது மதுரையில் உருவாக்கப்படவுள்ளது.

**மதிப்பு சங்கிலிகளை உருவாக்குதல்:**

உற்பத்தி, அறுவடை பின்சார் விளைபொருட்கள் மேலாண்மை, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சந்தைப்படுத்துதல், போன்ற நடவடிக்கைகளை

உட்படுத்தி நெல், மா, வாழை, கொய்யா, தக்காளி, மிளகாய் போன்ற பயிர்களின் மதிப்பு சங்கிலிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

## 2.8.2. இதர முயற்சிகள்

- உழவர்கள் மற்றும் உணவுசார் தொழில்முனைவோர்கள், உணவு மதிப்பு கூட்டுதல் மற்றும் பதப்படுத்துதல் சார்ந்த தகவல்களை பெறுவதற்கு உதவும் வகையில் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப தொகுப்பானது வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு வருகிறது.
- ஏற்றுமதி செயல்முறைகளை மேம்படுத்திடவும், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களின் ஏற்றுமதியினை எளிதாக்கிடவும் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்களைக் கொண்டு TNAPEx–இன் ஏற்றுமதி வசதி பிரிவானது உருவாக்கப்பட்டுள்ளது.

- உலகின் பல்வேறு நாடுகளில் இந்திய அங்கக வேளாண் உற்பத்தித் திட்டத்தின் கீழ் பெறப்படும் அங்கக வேளாண் விளைப்பொருட்களை இறக்குமதி செய்யும் சுமார் 650 நிறுவனங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் இதர நிறுவனங்கள் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாட்டின் தனித்துவம் வாய்ந்த மற்றும் பாரம்பரிய தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடு பதிவுசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.
    - செட்டிநாடு– கை முறுக்கு & சீடை
    - ராமநாதபுரம் – பனைவெல்லம்
    - கோவில்பட்டி– சீவல்
    - தமிழ்நாடு – இட்லி
    - ராமநாதபுரம் – பட்டறை கருவாடு

# 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ)

தமிழ்நாடு அரசால், மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் நிலையான வளர்ச்சிக்கு உதவும் முக்கிய நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ) 1970–ல் பொதுத் துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் அவற்றிற்கான தரமான உட்கட்டமைப்பு வசதி ஆகியவற்றை வழங்குவதை மையப்படுத்தி சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. அதாவது :

- தொழிற்பேட்டைகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல். மேலும் தனியார் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கான உதவிகள் வழங்குதல்

- தொழில் முனைவோர் உடனடியாக தொழில் தொடங்க ஏதுவான வசதிகளை உள்ளடக்கிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல்
- பொது வசதி மையங்கள் (CFCs) மற்றும் பொது உற்பத்தி உட்கட்டமைப்பு மையங்களை நிறுவுதல். MCDP திட்டத்தின் கீழ் குறுந்தொழில் நிறுவனங்களுக்கான குழுமங்களை மேம்படுத்துதல்.
- பணியாளர்கள் தங்கும் விடுதிகளை உருவாக்குதல்
- பெருங்குழுமங்களை உருவாக்குதல்
- மின் – ஆளுமை, தொழில் மனைகளுக்கான பட்டாக்கள் மற்றும் மூலப்பொருட்கள் விநியோகம் போன்ற பிற உதவிகள்

இவை அனைத்தும் **நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு (SDG) 9.2** –"உட்கட்டமைப்பு, மேம்பாட்டு வளர்ச்சிகளை ஏற்படுத்துவது மற்றும் பொது வசதி மையங்களை நிறுவுதல், நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் தொழில்துறையின் வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கை தேசிய அளவிற்கு ஏற்ப கணிசமாக உயர்த்துதல்" ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.

## 3.1. தொழிற்பேட்டைகள்

தொழில்முனைவோர்களின் இடத் தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்கில், மாநிலம் முழுவதும் தொழிற்பேட்டைகளை நிறுவுவது தமிழ்நாடு சிட்கோவின் முக்கிய பணியாகும். அத்தகைய நிலங்களை வழங்குவதன் மூலம், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த சமச்சீரான தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு சிட்கோ முக்கிய பங்காற்றுகிறது.

தமிழ்நாடு சிட்கோ தற்பொழுது மொத்தம் 8598.06 ஏக்கரில் அமைந்துள்ள 41 அரசு தொழிற்பேட்டைகள் மற்றும் 89 தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகள் ஆகியவற்றின் செயல்பாட்டினை கண்காணித்து நடைமுறைபடுத்தி வருகிறது. 130 தொழிற்பேட்டைகளின் விவரம் இணைப்பு–1–ல் கொடுக்கப்பட்டுள்ளன. 2023–24ஆம் நிதியாண்டில் தொழிற்மனைகள் விற்பனை மூலம் ரூ.102 கோடி வருவாய் ஈட்டப்பட்டு இந்நிறுவனம் ரூ.14.37 கோடி இலாபம் அடைந்துள்ளது.

### 3.2. புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

மாநிலம் முழுவதும் தொழில்மயமாக்கலின் வளர்ச்சிக்கு உதவும் நோக்கில், 2023–24 ஆம் ஆண்டில், ரூ.115.53 கோடி மதிப்பீட்டில் 7 மாவட்டங்களில் 8 புதிய தொழிற்பேட்டைகள் மொத்தம் 248.01 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்தொழிற்பேட்டைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | தொழிற் பேட்டையின் பெயர் | மேம்படுத் தப்பட்ட பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | சேலம் | உமையாள்புரம் | 20.07 | 4.50 |
| 2 | திரு வள்ளூர் | காவேரி ராஜபுரம் | 29.24 | 12.16 |
| 3 | செங்கல் பட்டு | கடம்பாடி | 21.06 | 15.39 |
| 4 | செங்கல் பட்டு | முள்ளிக் கொளத்தூர் | 28.00 | 8.26 |
| 5 | திருவாரூர் | வண்டாம் பாளை | 18.83 | 8.49 |
| 6 | தூத்துக்குடி | லிங்கம்பட்டி | 60.00 | 20.55 |
| 7 | கடலூர் | காடாம்புலியூர் | 28.61 | 7.48 |
| 8 | காஞ்சிபுரம் | வையாவூர் | 42.20 | 38.70 |
| | **மொத்தம்** | | **248.01** | **115.53** |

## 3.3. தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சிட்கோ நிறுவனம், தொழிற்பேட்டைகளில் உள்ள உட்கட்டமைப்பு

வசதிகளை மேம்படுத்த "குறு, சிறு நிறுவனங்கள் குழும வளர்ச்சி திட்டத்தின்" (MSE–CDP) கீழ் ரூ.58.13 கோடி மதிப்பீட்டில் கீழ்காணும் 20 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது.

| வ எ ண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | ஒன்றிய அரசின் மானியம் (ரூ.கோடியில்) | மாநில அரசின் மானியம் (ரூ.கோடியில்) | பயனாளர்கள் பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | ஓசூர் | 18.80 | 0.57 | 0.24 | 0.24 | 0.09 |
| 2 | கோயம்புத்தூர் | குறிச்சி | 88.43 | 1.52 | 0.61 | 0.61 | 0.30 |
| 3 | மதுரை | கப்பலூர் பகுதி–II | 534.64 | 1.88 | 0.75 | 0.75 | 0.38 |
| 4 | விருதுநகர் | விருதுநகர் | 45.65 | 0.35 | 0.14 | 0.14 | 0.07 |
| 5 | வேலூர் | முகுந்தராயபுரம் | 86.19 | 1.33 | 0.53 | 0.53 | 0.27 |
| 6 | நீலகிரி | ஊட்டி | 10.65 | 0.14 | 0.06 | 0.06 | 0.03 |
| 7 | காஞ்சிபுரம் | ஆலத்தூர் | 150.00 | 4.45 | 2.67 | 1.33 | 0.45 |
| 8 | திருவள்ளூர் | காக்களூர் | 283.01 | 4.23 | 2.54 | 1.27 | 0.42 |
| 9 | தூத்துக்குடி | கோவில்பட்டி | 85.54 | 2.02 | 1.21 | 0.61 | 0.20 |
| 10 | கரூர் | ஆத்தூர் | 36.29 | 3.97 | 2.38 | 1.19 | 0.40 |
| 11 | திருப்பூர் | கணபதி –பாளையம் | 17.10 | 0.46 | 0.27 | 0.14 | 0.05 |
| 12 | சேலம் | மேட்டூர் | 184.38 | 2.94 | 1.76 | 0.88 | 0.29 |
| 13 | கோயம்புத்தூர் | மலுமிச்சம்ப் –பட்டி | 36.14 | 2.00 | 1.13 | 0.57 | 0.30 |
| 14 | திருச்சி | திருவெறும்பூர் | 74.50 | 4.32 | 2.27 | 2.05 | 0.00 |
| 15 | மதுரை | கே. புதூர் | 56.05 | 5.20 | 2.20 | 2.48 | 0.52 |
| 16 | தஞ்சாவூர் | நாஞ்சிக் –கோட்டை | 26.30 | 2.85 | 1.05 | 1.52 | 0.29 |
| 17 | ஈரோடு | நஞ்சை ஊத்துக்குளி | 13.05 | 2.30 | 0.94 | 1.13 | 0.23 |
| 18 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 39.91 | 4.05 | 1.92 | 1.73 | 0.41 |
| 19 | இராணிப்பேட்டை | இராணிப் –பேட்டை | 113.44 | 9.55 | 3.43 | 5.17 | 0.96 |
| 20 | கிருஷ்ணகிரி | ஓசூர் (புதியது) | 18.88 | 4.00 | 1.39 | 2.21 | 0.40 |
| **மொத்தம்** | | | **1918.87** | **58.13** | **27.50** | **24.59** | **6.04** |

மேலும், கீழ்காணும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ எ ண் | மாவட்டம் | தொழிற்பேட்டை யின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி யில்) | ஒன்றிய அரசின் மானியம் (ரூ.கோடி யில்) | மாநில அரசின் மானியம் (ரூ.கோடி யில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதுரை | உறங்கான்பட்டி | 69.84 | 9.55 | 5.73 | 2.86 |
| 2 | கன்னியா குமரி | கோணம் | 20.70 | 1.43 | 0.86 | 0.57 |
| 3 | விருதுநகர் | விருதுநகர் | 45.65 | 3.92 | 2.35 | 1.57 |
| 4 | சென்னை | அம்பத்தூர் | 1167.00 | 9.97 | 4.65 | 4.32 |
| | | **மொத்தம்** | **1303.19** | **24.87** | **13.59** | **9.32** |

மேலும், ஒரு சிறப்பு முயற்சியாக, 2022-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சிட்கோ, 53 தொழிற்பேட்டைகளை 'ஒரு முறை மேம்படுத்தும் பணிகள் திட்டத்தின்' கீழ் ரூ.12.38 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தி உள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 30 தொழிற்பேட்டைகளில் ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 3.4. மகளிருக்கான தனித்துவ தொழிற் பூங்காக்கள் உருவாக்குதல்

மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு சிட்கோ மகளிர் தொழிற்பூங்காக்களை நிறுவி வருகிறது. பின்வரும் இடங்களில் 5 மகளிர் தொழிற்பூங்காக்கள் தமிழ்நாடு சிட்கோவால் உருவாக்கப்பட்டுள்ளன.

1. திருமுல்லைவாயல் (திருவள்ளூர் மாவட்டம்)
2. திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
3. கருப்பூர் (சேலம் மாவட்டம்)
4. வாழவந்தான் கோட்டை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) மற்றும்
5. கப்பலூர் (மதுரை மாவட்டம்)

மேற்கண்ட தொழிற் பூங்காக்கள் மகளிர் தொழில்முனைவோர்கள், தொழில் தொடங்குவதற்கும் பொருளாதாரரீதியாக தனித்து செயல்படவும் வாய்ப்பளிப்பதின் மூலம், அதிகாரமளிப்பதிலும், சமச்சீர் சமுதாய சமத்துவத்தை மேம்படுத்தவும் வழிவகை செய்கிறது.

## 3.5. புதிய தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்கள் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும் பட்சத்தில் மொத்த திட்ட மதிப்பில் 50% மாநில அரசு மானியத்துடன் ரூ.15 கோடிக்கு மிகாமல் தனியார் தொழிற்பேட்டைகளை நிறுவ தமிழ்நாடு சிட்கோ உதவி செய்கிறது. 2023–2024 ஆம் ஆண்டில், அதிக பயனாளிகளுக்கு உதவும் வகையில், அதற்கான குறைந்தபட்ச நிலப்பரப்புத் தேவையானது 50 ஏக்கரில் இருந்து 10 ஏக்கராகக் குறைக்கப்பட்டுள்ளது. பின்வரும் தனியார் தொழிற்பேட்டைகள் தற்போது உருவாக்கத்தில் உள்ளன.

| வ. எண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | மாநில அரசின் மானியம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | மதுரை | தி/ள். மதுரை பொறியியல் குழுமம் (பி) லிமிடெட், மேலவளவு | 54.00 | 13.64 | 6.82 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | கோயம்புத்தூர் | தி/ள். கொடீசியா இண்டஸ்ரியல் பார்க் (பி) லிமிடெட், கள்ளப் பாளையம் | 116.24 | 20.00 | 10.00 |
| 3 | கோயம்புத்தூர் | தி/ள்.கொசிமா இண்டஸ்ரியல் பார்க் லிமிடெட், சொலவம் பாளையம் | 42.42 | 18.06 | 9.03 |
| 4 | கோயம்புத்தூர் | தி/ள்.அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை லிமிடெட், கிட்டாம் பாளையம் | 316.04 | 24.61 | 12.307 |
| | | **மொத்தம்** | **528.70** | **76.31** | **38.157** |

## 3.6. தனியார் தொழிற்கூடங்களை நகரம் மற்றும் பெருநகரங்களுக்கு வெளியே இடம் பெயரச் செய்தல்

தொழில்மயமாக்கல், சமச்சீர் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல் மற்றும் மாசுபாடு ஏற்படுவதை குறைக்கும் நோக்கில் தமிழ்நாடு சிட்கோ நகரத்தில் இருந்து புறநகர்ப் பகுதிகளுக்கு இடம் பெயர தயாராக உள்ள தொழிற்சங்கங்களுக்கு, திட்ட மதிப்பில் 75%

அதிகபட்சம் ரூ.20 கோடி வரை மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தினை விரைவுப்படுத்துவதற்காக 2023-2024-ஆம் ஆண்டில் நில மதிப்பு அதிகரித்து கொண்டே வருவதாலும் மற்றும் அதிக பரப்பிலான நிலங்களை கண்டறிவதில் உள்ள சிரமங்களையும் கருத்தில் கொண்டு இத்திட்டத்திற்கான குறைந்தபட்ச நிலப்பரப்புத் தேவையானது 10 ஏக்கரிலிருந்து 2 ஏக்கராக குறைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023-இல் கடலூர் மாவட்டத்தில் ரூ.3.29 கோடி மானியத்துடன் ரூ.4.39 கோடி திட்ட மதிப்பீட்டில் ஈஸ்ட் கோஸ்ட் ஆட்டோமொபைல் சர்வீசஸ் பிரைவேட். லிமிடெட், குழுமத்தினை நகரிலிருந்து புறநகர் பகுதிக்கு இடம் பெயர மேம்பாட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றன.

### 3.7. அடுக்குமாடி தொழிற்கூட வளாகங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உடனடியாக உற்பத்தியினை

தொடங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி பொருட்களை ஒருங்கிணைத்தல் போன்ற வசதிகளை உள்ளடக்கியதாக அடுக்குமாடி தொழிற்கூட வளாகங்கள் விளங்குகின்றன. இந்த வளாகங்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு வகையான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான வசதிகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு சிட்கோவால் 2023–2024–ஆம் ஆண்டு பின்வரும் வளாகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

| வ எண் | தொழிற்பேட்டை | தளங்களின் எண்ணிக்கை | தொழிற்கூட அலகுகளின் எண்ணிக்கை | கட்டட பரப்பு (சதுர அடியில்) | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | கிண்டி | அடித்தளம், தரைதளம் + 6 | 152 | 1,97,024 | 94.67 |
| 2 | அம்பத்தூர் | தரைதளம் + 4 | 112 | 1,31,427 | 63.95 |
| | மொத்தம் | | 264 | 3,28,451 | 158.62 |

மேலும், கீழ்கண்ட அடுக்குமாடி தொழிற்கூட வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன:

- சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டி கிராமத்தில், தமிழ்நாடு சிட்கோ நிறுவனம்

வெள்ளி கொலுசு உற்பத்தியாளர்களுக்கு தேவையான பணியிடத்தை வழங்கும் வகையில் ரூ.24.55 கோடி திட்ட மதிப்பில் 1.20 ஏக்கர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 3 தளங்களுடன் 100 அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழிற்கூட வளாகத்தினை உருவாக்கி வருகிறது.

- மேலும், ரூ48.88 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில், ஓசூர் (ஜுஜுவாடி) மற்றும் மதுரை (கே.புதூர்) ஆகிய தொழிற்பேட்டைகளில் அடுக்குமாடி தொழிற்கூட வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- ரூ.98.08 கோடி திட்ட மதிப்பீட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ள சக்கிமங்கலம் தொழிற்பேட்டையிலும் மற்றும் ரூ.37 கோடி திட்ட மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குறிச்சி தொழிற்பேட்டையிலும்

அடுக்குமாடி தொழிற் கூட வளாகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3.8. பொது வசதி மையங்கள் (CFCs)**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்திறனை மேம்படுத்த, தமிழ்நாடு சிட்கோவால் பொது வசதி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது MSE–CDP திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பொது வசதி மையங்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களின் உற்பத்தியின் மதிப்பு கூட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் போன்றவற்றின் மூலம் பயன் பெற்று வருகின்றன. இதுவரை, தமிழ்நாடு சிட்கோ ஒப்புதல் பெறப்பட்ட 49 திட்டங்களில் ரூ.210.69 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் 32 பொதுவசதி மையங்களை நிறுவியுள்ளது. மீதமுள்ள 17 திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் 2023–2024–ஆம் ஆண்டில், பின்வரும் 3 பொதுவசதி மையங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன:

- துல்லிய கருவிகள் தயாரிப்புக் குழுமம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்
- அட்டை மற்றும் அச்சுக் குழுமம், திருப்பத்தூர் மாவட்டம் மற்றும்
- தங்க நகைக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம்

**இதன் மூலம், MSE–CDP திட்டத்தை செயல்படுத்துவதில் அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.**

பொது வசதி மைய திட்டங்களின் தற்போதைய நிலை

| வ. எண் | நிலை | எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (கோடியில்) | ஒன்றிய அரசின் மானியம் (கோடியில்) | மாநில அரசின் மானியம் (கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 32 | 210.69 | 141.11 | 20.54 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 17 | 259.83 | 181.85 | 32.50 |
| | **மொத்தம்** | **49** | **470.52** | **322.96** | **53.04** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொது வசதி மைய திட்டங்களின் விவரங்கள் முறையே **இணைப்பு–2, இணைப்பு–3** ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 3.9. பொது உற்பத்தி உட்கட்டமைப்பு (CPI)

பொது உற்பத்தி உட்கட்டமைப்புத் திட்டம், குறுந் தொழில் குழுமங்களுக்கு உதவும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 5 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. 3 திட்டங்கள் தற்போது செயலாக்கத்தில் உள்ளன. இதன் தற்போதைய நிலை பின்வருமாறு:

| வ. எண் | நிலை | எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | மாநில அரசு மானியம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 5 | 16.93 | 11.29 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 3 | 13.56 | 6.63 |
| **மொத்தம்** | | **8** | **30.49** | **17.92** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, பொது வசதி உட்கட்டமைப்பு திட்டங்களின் விவரங்கள் **இணைப்பு–4** ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 3.10. பணியாளர்கள் தங்கும் விடுதிகள்

தொழிலாளர்களுக்கென பணியிடத்திற்கு அருகிலேயே குறைந்த வாடகையில் தரமான தங்குமிட வசதியினை வழங்கும் நோக்கில் பணியாளர்கள் தங்கும் விடுதிகள் தமிழ்நாடு சிட்கோவால் அமைக்கப்படுகிறது.

- சென்னை மாவட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 800 தொழிலாளர்கள் தங்கும் வகையில் தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதி ரூ.29.47 கோடி திட்ட மதிப்பீட்டில் 1.21 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி தொழிற்பேட்டையில் 510 தொழிலாளர்கள் தங்கும் வகையில் தொழிலாளர்களுக்கான

தங்கும் விடுதி ரூ 22 கோடி திட்ட மதிப்பில் 1.49 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு வருகிறது.

### 3.11. பெருங்குழுமங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உலகளாவிய தேவைக்கான தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தி தரும் வகையில் முக்கிய துறைகளில் பெருங்குழுமங்களை நிறுவும் பணியினை தமிழ்நாடு சிட்கோ முன்னெடுத்து உள்ளது. இப்பெருங்குழுமங்கள் பல்வேறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கினை அடைய உதவும்.

### பெருங்குழுமங்களின் விவரங்கள்

| வ. எ ண் | குழுமத்தின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) | ஒன்றிய அரசின் மானியம் (ரூ. கோடியில்) | மாநில அரசின் மானியம் (ரூ. கோடியில்) | குழுமத்தின் பங்களிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மருந்துப் பொருட்கள் பெருங்குழுமம், திண்டிவனம் | 111.47 | 155.01 | 20.00 | 51.56 | 83.45 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம், திருமுடிவாக்கம் | கட்டட பரப்பு – 5730 சதுர அடி மற்றும் நிலம் – 1.876 ஏக்கர் | 47.62 | – | 33.33 | 14.29 |

## 3.12. பிற முன்னெடுப்புகள்

### 3.12.1. தொழில் மனைகள்/தொழிற்கூடங்கள்/ தொழிற்கூட அலகுகள் ஒதுக்கீட்டு கொள்கை

தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளில் காலியாக உள்ள தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் / தொழிற்கூட அலகுகள் குறித்த விவரங்கள் தமிழ்நாடு சிட்கோவின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டு கிரைய விற்பனை, குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒதுக்கீடு கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் தகுதியான விண்ணப்பதாரர்களை தேர்வு செய்ய தேர்வுக் குழுக் கூட்டம் கூட்டப்படும். தகுதியான விண்ணப்பதாரர்கள்

அதிக எண்ணிக்கையில் இருந்தால், விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்தியினை விரைந்து தொடங்கும் பொருட்டு தமிழ்நாடு சிட்கோவின் தொழில்மனைகள் / தொழிற்கூடங்களை தாமதமின்றி பெற்றுக்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் (TIIC) தொழில் உட்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டம் மற்றும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் (TAICO) Flexi Loan for Your MSME (FLY –MSME) என்ற திட்டங்களின் மூலம் இடைக்கால கடன் வழங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 3.12.2. மின் ஆளுமை முயற்சிகள்

தமிழ்நாடு சிட்கோ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு விரைவான மற்றும் நேர்த்தியான சேவைகளை வழங்குவதற்காக தனது செயல்பாடுகளை கணினிமயமாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2023-2024 ஆம் ஆண்டில் பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு சிட்கோவின் புவியியல் தகவல் அமைப்பு, இந்திய அரசின் தொழில் தகவல் அமைப்பு (Indian Industrial Information System) மற்றும் இந்திய தொழில் வங்கி (Indian Industrial Land Bank – IILB) ஆகியவை சிட்கோவின் வலைதளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- ஒதுக்கீடுதாரர்களுக்கு உரிய சேவைகளை வழங்கவும், நிறுவனம் வழங்கும் சேவைகள் மற்றும் திட்டங்கள் குறித்த தகவல்களை உடனடியாக அறியவும் : www.tansidco.tn.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மனை ஒதுக்கீட்டிற்கான இணைய வழி விண்ணப்பம் தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணைய தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பின்வரும் மின்னணு சேவைகள் வழங்கப்படுகின்றன:
    - ❖ காலியாக உள்ள தொழில் மனைகளை இணையதளத்தில் பார்வையிடும் வசதி
    - ❖ தொழிற்பேட்டைகளின் வரைபடத்துடன் புவியியல் தகவல் அமைப்பு (GIS) பார்வையிடும் வசதி.
    - ❖ மனைகள் / தொழிற்கூடங்கள் / தொழிற்கூட அலகுகள் ஒதுக்கீடு செய்ய இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் விண்ணப்பத்தின் நிலையினை அறிதல்
    - ❖ விண்ணப்பக் கட்டணம், மனைத்தொகை போன்றவற்றை மின்னணு முறையில் செலுத்துதல்.
    - ❖ எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், ஒதுக்கீட்டு

ஆணைகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி.

❖ குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் தற்போதைய நிலையினை தெரிவித்தல்

- மேற்கண்ட சேவைகளுடன், 2023–2024 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சிட்கோ ஒதுக்கீடுதாரர்களுக்கு பின்வரும் இணையதள சேவைகள் வழங்கி வருகிறது.

❖ வங்கிகள் / நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு தடையின்மை சான்று வழங்குதல்

❖ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு மின் இணைப்பு வழங்க தடையின்மை சான்று வழங்குதல்

❖ குடிநீர் இணைப்பு கோரி விண்ணப்பித்தல்

❖ மனைத்தொகை செலுத்த கால அவகாசம் வேண்டி மனு செய்தல்

- ❖ விற்பனை பத்திரம் கோரி விண்ணப்பித்தல்
- ❖ மனைகள் / தொழிற்கூடங்கள் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பித்தல்
- ❖ மனைகள் / தொழிற்கூடங்கள் குத்தகைக்கு வழங்குதல் (அல்லது பெயர் மாற்றம்)
- ❖ நிறுவன அமைப்பு மாற்றம் / நிறுவனத்தின் பெயர் மாற்றம் / செயல்பாடுகள் மாற்றம் செய்ய கோரி விண்ணப்பித்தல் (மற்றும்)
- ❖ இதர சேவைகள்

- ஒதுக்கீட்டாளர்கள் தங்களுக்குரிய தனித்துவமான கடவுச்சொல் மற்றும் பயனாளி அடையாள எண் ஆகியவற்றை உள்ளீடு செய்து மனைத் தொகை செலுத்துதல், நிலுவை மனைத் தொகை மற்றும் அதனை செலுத்துதல் ஆகியவற்றிற்கான கால

அவகாசம் தெரிந்து கொள்ளல் குறித்து இணையதள முகப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

- ஒதுக்கீட்டாளர்கள் மற்றும் தொழிற்பேட்டை சங்கத்தினர் தங்களது தொழிற்பேட்டை சார்ந்த கோரிக்கைகளை தெரிவித்து, தாமதமின்றி தீர்வு பெறும் பொருட்டு, கோரிக்கைகளுக்கான தனித்துவ மின்னஞ்சல் **(grievanceredressal@tansidco.org)** உருவாக்கப்பட்டுள்ளது.
- மேற்கூறிய சேவைகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், தணிக்கைச் சோதனையுடன் கூடிய கணக்கியல் மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது.

### 3.12.3. தொழில் மனைகளுக்கான பட்டா

அரசினால் உருவாக்கப்பட்டு உரிமை மாற்றம் செய்யப்பட்ட 41 தொழிற்பேட்டைகள் மற்றும் அரசிடமிருந்து நில உரிமை மாற்றம் மற்றும் பிற

வகைகளில் பெறப்பட்ட நிலங்களில் தமிழ்நாடு சிட்கோ மூலம் உருவாக்கப்பட்டுள்ள 89 தொழிற்பேட்டைகள் செயல்பாட்டில் உள்ளன. இந்த நிலங்களின் வகைப்பாடு வருவாய் ஆவணங்களில் பெரும்பான்மையான தொழிற்பேட்டைகளுக்கு அரசு புறம்போக்கு நிலம் எனவும், ஒரு சில தொழிற்பேட்டைகளில் இரயத்துவாரி நிலம் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், இப்பிரிவில் உள்ள நிலங்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களால் பட்டா பெற இயலாத நிலை உள்ளது.

இதனை நிவர்த்தி செய்ய, அரசு புறம்போக்கு என வகைப்பாடு உள்ள நிலத்தினை இரயத்துவாரி நிலங்களாக மாற்றம் செய்ய அரசு தலைமைச் செயலாளர் தலைமையிலான அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது வரை 23 அரசு தொழிற்பேட்டைகள் மற்றும் 21 சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள 1937.37 ஏக்கர் அரசு

புறம்போக்கு நிலத்தின் வகைப்பாடு இரயத்துவாரி என வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 3.12.4. மூலப்பொருட்கள் விநியோகம்

தமிழ்நாடு சிட்கோவினால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையின் அடிப்படையில் பாரஃபின் மெழுகு மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாடு முழுமைக்கும் தனது 20 கிளை அலுவலகங்கள் மற்றும் கிடங்குகள் மூலமாக விற்பனை செய்கிறது. 2023-24 ஆம் ஆண்டில், மூலப்பொருள் உதவித் திட்டத்தின் கீழ், சுமார் 1094.5 மெட்ரிக் டன்கள் மூலப் பொருட்கள், அதாவது பாரஃபின் மெழுகு மற்றும் TNPL காகிதம் ஆகியவை ரூ.12.07 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டன.

# 4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

## 4.1. உருவாக்கம்

"டான்சி" என்று பிரபலமாக அழைக்கப்பெறும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வணிக துறையின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருந்த 64 தொழிற்கூடங்களை ஒருங்கிணைத்து தனி நிறுவனமாக கடந்த 1965–இல் தோற்றுவிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வந்தது. இந்நிறுவனத்தின் ஆரம்பகால நிகர சொத்துக்கள் மதிப்பு சுமார் ரூ.668.612 இலட்சமாகும். தொழில் வணிக துறையின் கீழ் இயங்கி வந்த தொழிற்கூடங்கள் அரசின் 5 ஆண்டு திட்ட காலங்களில் நிறுவப்பெற்றது. இதன் நோக்கங்களாவன:–

- ❖ பயிற்சி மற்றும் செயல்முறை விளக்க கூடம் அமைத்தல்
- ❖ தொழில் வளர்ச்சிக்கான கட்டுமானத் திட்டங்கள் உருவாக்குதல்

- ❖ பொருளாதார வளர்ச்சி பரவல் மற்றும் உறுதி செய்தல்

### 4.2. நோக்கம்

முன்னணி நிறுவனமாக தனித்தன்மையுடன் நிலைபெற்று தமிழ்நாட்டின் அனைத்து தரப்பினருக்கும் நியாயமான விலையில், காலமறிந்து சிறப்பாகவும், திருப்திகரமாகவும் உற்பத்தி பொருட்களையும் மற்றும் பணிகளையும் செய்தளித்து செயல்பட நிறுவப்பெற்றது.

### 4.3. உற்பத்தி பொருட்கள்

- ❖ பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் விடுதிகளுக்குத் தேவையான வகுப்பறை அறைகலன்கள்
- ❖ வீடுகள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கான அறைகலன்கள்
- ❖ தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திற்கு (TNMSC) தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள்

- ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசினி கரைசல்களான லைசால், பினாயில்
- இந்தியா மார்க்–II கைப்பம்புகள் மற்றும் குழந்தைகள் எடை போடும் கருவி
- எனாமல் மற்றும் சாலை குறியீடு வர்ணங்கள்

## 4.4. தமிழ்நாடு முழுவதும் உள்ள உற்பத்தி தொழிற்கூடங்கள்

- பொறியியல் தொழிற்கூடங்கள் – 3
- மர அறைகலன் தொழிற்கூடங்கள்– 14
- சிறப்பு வகை தொழிற்கூடங்கள் – 3

மொத்தம் – 20

- காட்சியகங்கள் – 2
  (சென்னை மற்றும் திருச்சி)

## 4.5. 2023-24 ஆம் ஆண்டில் முடிக்கப்பெற்ற குறிப்பிடத்தக்க பணி ஆணைகள் (ரூ.1 கோடிக்கு மேல்)

- ❖ பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு சாய்வு மேசை – ரூ.20.24 கோடி
- ❖ தமிழ்நாடு மாதிரி பள்ளிக்கு வழங்கப்பட்ட எஃகு சாய்வு மேசை மற்றும் எஃகு இரண்டடுக்கு கட்டில் – ரூ.11.37 கோடி
- ❖ உயர் கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.9.82 கோடி
- ❖ இல்லம் தேடி கல்விக்கு (சமக்ர சிக்ஷா) வழங்கப்பட்ட எழுது பொருட்கள் தொகுப்பு – ரூ.6.00 கோடி
- ❖ பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.5.60 கோடி
- ❖ சமக்ர சிக்ஷாவிற்கு வழங்கப்பட்ட பாலர் கல்வி உபகரணங்கள் – ரூ.2.50 கோடி

- கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட எஃகு அறைகலன்கள் – ரூ.2.49 கோடி
- பொது நூலகத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.1.73 கோடி.
- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.1.72 கோடி.
- மாநில வேளாண்மை சந்தைப்படுத்தல் வாரியத்திற்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்– ரூ.1.32 கோடி.
- தஞ்சாவூர் ஸ்மார்ட் சிட்டி, சிவகங்கை பூங்கா வடிவமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணி – ரூ.3.99 கோடி

**4.6. 2024–25 ஆம் நிதி ஆண்டில் உற்பத்தியில் உள்ள பணி ஆணைகள் (ரூ. 1 கோடிக்கு மேல்)**

- பொது நூலகத் துறைக்கு வழங்கவேண்டிய எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.57.62 கோடி.

❖ தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கவேண்டிய எஃகு மற்றும் மர அறைகலன்கள்– ரூ.21.91 கோடி.

❖ சமக்ர சிக்ஷாவிற்கு வழங்கவேண்டிய பல்வேறு கல்வி கற்றல் உபகரணங்கள் – ரூ.3.77 கோடி

❖ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கவேண்டிய எஃகு மற்றும் மர அறைகலன்கள்– ரூ.3.04 கோடி.

❖ இராஜா ராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளைக்கு (கொல்கத்தா) வழங்க வேண்டிய எஃகு அறைகலன்கள் – ரூ.2.05 கோடி.

❖ வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு வழங்கவேண்டிய எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.1.57 கோடி.

❖ அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு (சென்னை) வழங்கவேண்டிய எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.1.57 கோடி.

**4.7. அடுக்குமாடி தொழில் வளாகம் (Plug and Play)**

2023–24 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிண்டியில் 3.08 ஏக்கர் டான்சி நிலத்தில் சுமார் 2 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் 200 தொழில் முனைவோருக்கு பயன்படத்தக்க அடுக்குமாடி தொழில் வளாகம் (Plug and Play) ரூ.175 கோடி (நிலம் ரூ.112 கோடி மற்றும் கட்டடம் ரூ.63 கோடி) செலவில் கட்டப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, கட்டுமானப் பணி டான்சிட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டு செயல்முறையில் உள்ளது.

## 4.8. அரசு இ–விற்பனை முகமை மூலம் விற்பனை விபரம்

டான்சி நிறுவனம் கடந்த டிசம்பர், 2022 முதல் அரசு இ–விற்பனை முகமையில் (GEM PORTAL) பதிவு செய்து கொள்முதல் மற்றும் விற்பனை சேவைகளை மேற்கொண்டுள்ளது. இ–விற்பனை முகமை மூலம் இதுவரை ரூ.1.06 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 4.9. நிறுவன வள திட்டமிடல்

இந்நிறுவனம் தனது தனித்துவமான நிறுவன வள திட்டமிடல் (ERP) மூலம் நிர்வாகம், மனித வளம், பொருள் மேலாண்மை, நிதி / கணக்கு, சந்தைப்படுத்துதல், முதலியவை உள்ளிட்ட தனது தினசரி நடவடிக்கைகளை 2022–2023 ஆம் நிதி ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

## 4.10. நிறுவன சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ் பங்களிப்பு

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு டான்சி நிறுவனம் ரூ.3.04 கோடி மதிப்பிலான பொருட்களை உற்பத்தி செய்து வழங்கவுள்ளது.

## 4.11. 2023–2024 ஆம் ஆண்டில் டான்சி நிறுவனத்தின் செயல்பாடுகள்

| விபரம் | 2023–24<br>ரூ. கோடியில்<br>(தணிக்கைக்கு முன்) |
|---|---|
| இலக்கு | 100.00 |
| உற்பத்தி | 118.21 |
| விற்பனை | 126.32 |
| நிகர இலாபம் | 11.57 |
| செயல்முறை இலாபம் | 7.70 |

# 5. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN)

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN), புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவினை மேம்படுத்துவதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் (MSME) கீழ் 2001 ஆம் ஆண்டு ஒரு இலாப நோக்கமற்ற சங்கமாக தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது.

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகளில் தொழில்முனைவோர் பயிற்சித் திட்டங்களை நடத்துதல், பள்ளி மற்றும் உயர்கல்வி மாணவர்கள் தங்கள் படைப்புத் திறன்களைப் பயன்படுத்தி, படிக்கும் போதே உள்ளூர் பிரச்சனைகளுக்கு புத்தாக்கம் மற்றும் தீர்வுகளை வழங்குதல், மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்களுடன் கூட்டாண்மை உருவாக்குதல், உயர் தொழில்நுட்ப

நிறுவனங்களுடன் செயல்பாடுகளில் இணைப்பு, புத்தாக்கம் மற்றும் வணிக வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். மேலும் மாநிலத்தில் தொழில்முனைவு மற்றும் புத்தாக்க சூழலை உருவாக்குதலும் அடங்கும்.

**நோக்கம்**

தொழில்முனைவோர் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியின் மூலம் தமிழ்நாடு முழுவதும் ஆர்வமுள்ள மற்றும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய தொழில்முனைவு மற்றும் வணிக புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல் இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

**உத்திகள்**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது பின்வரும் உத்திகளை கையாண்டு தமிழ்நாட்டில் தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது:–

- ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் தொழில்முனைவு திறன்களை வளர்த்தல்.
- தொழில் நுட்பங்கள் மற்றும் புத்தொழிலுக்கான சூழல்களை உருவாக்க, தொழில்முனைவோர்களுக்கு உதவுதல்.
- முறையான கல்வி முறையில், தொழில் முனைவோர் கல்வியை உட்புகுத்துதல்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் பற்றிய ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பு சூழல்களை உருவாக்க அனைத்து அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்துதல்.
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு புத்தாக்க சிந்தனையை ஊக்குவிக்கும்

விதமாக ஹேக்கத்தான் போட்டிகள் நடத்துதல்.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், அரசு துறை சார்ந்த திட்டங்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி, ஒருங்கிணைப்பு திட்டம் மற்றும் சுய நிதித் திட்டம் ஆகியவற்றின் மூலம் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம், IEDP/ஹேக்கத்தான், தொழில் வளர்காப்பகங்கள் திட்டம் மற்றும் புத்தாக்க பற்றுச்சீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் புத்தாக்க ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மூலம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகிறது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கீழ் பல்வேறு துறை சார்ந்த 376

வல்லுநர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## 5.1. தொழில்முனைவோர் மேம்பாட்டுத்திட்டங்கள்

வாழ்க்கை சுழற்சி அணுகுமுறை மற்றும் செயல்முறை அடிப்படையிலான மாதிரி வடிவமைப்பில், ஆர்வமுள்ள மற்றும் ஏற்கனவே தொழில்முனைவோர்களாக உள்ளவர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது.

### 5.1.1. தொழில்முனைவோர் மேம்பாட்டுத்திட்டம் – ஒருங்கிணைப்பு திட்டம்

இத்திட்டத்தின் வாயிலாக வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் (UYEGP) 3420 வேலையற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (NEEDS)

990 தொழில்முனைவோர்கள் மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில்முனைவோர் முன்னோடி திட்டத்தின் கீழ் (AABCS) 1938 தொழில்முனைவோர் பயனடையும் வகையில் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் இணையவழியாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் 5 சிறு குழுமங்களில் (கயிறு குழுமம், விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம், கம்பளி குழுமம், பாத்திர (Stainless steel) குழுமம், அறைக்கலன்கள் குழுமம்) உள்ள 132 உறுப்பினர்களுக்கு தொழில் ஆணையரகத்துடன் இணைந்து தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (TAHDCO), வாழ்ந்துகாட்டுவோம் திட்டம் (VKP), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

(TNULM) ஆகிய அரசு நிறுவனங்களுடன் இணைந்து 2023-2024-இல், ரூ.107.72 இலட்சம் மதிப்பீட்டில் 5304 நபர்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்(TAHDCO) | 1765 | 48.70 |
| 2 | வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) | 3021 | 52.00 |
| 3 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) | 518 | 7.02 |
| **மொத்தம்** | | **5304** | **107.72** |

### 5.1.2. தொழில்முனைவோர் மேம்பாட்டுத்திட்டம் – சுய நிதி திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஆர்வமுள்ள மற்றும் ஏற்கனவே உள்ள தொழில்முனைவோர்களுக்கு மின்னணு முறையில் சந்தைப்படுத்தல், பேக்கரி

பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, அடையாளப்படுத்துதல் (Branding) பயிற்சி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பயிற்சி, புகைப்படம் மற்றும் வீடியோ எடிட்டிங் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் நிதியாண்டில், 374 நபர்கள் பயனடையும் வகையில், கீழ்க்கண்ட 15 சுய நிதி தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டு அதில் ரூ.7.43 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது:–

| வ. எண் | விவரம் | நிகழ்ச்சிகள் (Programmes) | பயனாளிகள் | நிகர வருவாய் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | மின்னணு முறையில் சந்தைப்படுத்தல். | 2 | 48 | 0.51 |
| 2 | "யூடியூப் சேனல் உருவாக்குதல் பயிற்சி" | 5 | 161 | 3.36 |
| 3 | பேக்கரி தயாரிப்புகள் தொடர்பான பயிற்சி | 2 | 42 | 0.99 |
| 4 | ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள பொருட்களை அடையாளம் காணுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி | 2 | 53 | 1.61 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | தொழிற்சாலை இரசாயன பொருட்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு பொருட்கள் தயாரித்தல் பயிற்சி. | 1 | 20 | 0.35 |
| 6 | அழகுசாதனப் பொருட்கள் மற்றும் தோல் பராமரிப்புப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி. | 1 | 18 | 0.39 |
| 7 | அழகுக்கலை பயிற்சி. | 1 | 10 | 0.04 |
| 8 | தொழில்முனைவோருக்கான ஒப்பந்த புள்ளி வழிமுறைகள் (GeM) தொடர்பான பயிற்சி. | 1 | 22 | 0.18 |
| **மொத்தம்** | | **15** | **374** | **7.43** |

## 5.2. புத்தாக்க ஊக்குவிப்பு

### 5.2.1. IEDP / உயர்கல்வி மாணவர்களுக்கான EDII's ஹேக்கத்தான்

EDII's ஹேக்கத்தான் என்பது உயர்கல்வி மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனைகளை விதைத்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளைக் வழங்கி, தீர்க்கமுடியாத தற்காலப் பிரச்சனைகளுக்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு சந்தைப்படுத்தக்கூடிய பொருளை புத்தாக்க முறையில் கண்டுபிடிக்க வைத்தல் ஆகும். இதன் மூலம் அவர்களிடையே தொழில் முனைவு இலட்சியத்தை

உருவாக்கி அவர்களின் திறன்களை மேம்படுத்துவதோடு, தொழில் நிறுவனங்களை தொடங்க ஊக்குவிப்பதன் மூலம், வேலை வாய்ப்புக்களை உருவாக்க வழிவகுக்கிறது.

இது உயர்கல்வி மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனையினை உருவாக்குவதற்கான அரசின் புத்தாக்க திட்டமாகும். முதலில் இது "தமிழ்நாடு மாணவர் கண்டுபிடிப்பாளர்கள்" (TNSI) திட்டமாகவும் 2016–ஆம் ஆண்டு முதல் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் (IEDP) கீழ் செயல்பட்டு வந்தது. 2023–2024–ஆம் ஆண்டு முதல் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஹேக்கத்தான் (EDII's Hackathon) எனப் பெயர் மாற்றப்பட்டு செயல்படத் துவங்கியுள்ளது.

**EDII's ஹேக்கத்தான் திட்டத்தின் நோக்கங்கள்:**

- சமூக உணர்வுள்ள மற்றும் சமுதாய வளர்ச்சியில் எண்ணம் கொண்ட இளைஞர்களை ஊக்குவித்தல்.

- புத்தாக்க கண்டுபிடிப்புக்கள் மூலம் உள்ளூர் பிரச்சனைகளுக்கு தொழிநுட்ப ரீதியிலான தீர்வுகளை கண்டுபிடித்து வழங்குதல்.
- வர்த்தக முத்திரைகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளை உருவாக்குதல்.
- வேலை வாய்ப்புகள் மற்றும் வலுவான பொருளாதாரத்தினை உருவாக்குதல்.
- மாணவர்களின் ஆக்கத்திறனினை மேம்படுத்துதல், ஒட்டுமொத்த சமூகம் பயன்பெறுதல்.

**பங்கேற்பாளர்கள்:**

1. அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்த பொறியியல் கல்லூரிகள்
2. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
3. வேளாண்மைக் கல்லூரிகள்
4. கால்நடை மருத்துவக் கல்லூரிகள்
5. மீன்வளக் கல்லூரிகள்

6. தேர்ந்தெடுக்கப்பட்ட நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள்
7. தன்னாட்சிக் கல்லூரிகள்
8. பாலிடெக்னிக்
9. தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் (ITIs)

மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்படும். நடப்பு ஆண்டில், இத்திட்டம் இளங்கலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு மட்டும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**சாதனைகள்:**

- 2023–2024 ஆம் ஆண்டில், 2,469 பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன,
- 1,990 மாணவ வழிநடத்துனர்களுக்கு 2023–2024 ஆம் ஆண்டில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.
- சென்ற ஆண்டில் 38 மாவட்டங்களில் இடையூறுகளை கண்டறியும்

கருத்துப்பட்டறை நடத்தப்பட்டு, அதன்மூலம் 2,576 பிரச்சனைகள் கண்டறியப்பட்டது.

- 1,716 உயர்கல்வி நிறுவனங்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் 3.50 இலட்சம் மாணவர்களுக்கு தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.2. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP)

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் நிதியம் (UNICEF) ஆகியவற்றுடன் இணைந்து 2022–2023 ஆம் ஆண்டு முதல் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.09.2022 அன்று தொடங்கப்பட்டது. இதுபோன்று மாநிலம் முழுவதும் பள்ளிகளுடன்

இணைந்து நடத்தப்படும் ஹேக்கத்தான் திட்டம் இதுவே முதலாவது ஆகும்.

**நோக்கங்கள்**

- பள்ளி மாணவர்களிடையே புதிய தொழில் கண்டு பிடிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில்முனைவோர் கலாச்சாரத்தை வெளிப்படுத்துதல்.
- பள்ளி மாணவர்கள், தலைமைத்துவ தொழில்முனைவோர் திறன்களை பெறுவதற்கான முறையான எளிய புத்தாக்கம் மற்றும் வடிவமைப்பு சிந்தனையை பயன்படுத்தி நடைமுறை தொழில் பிரச்சனைகளை தீர்க்க அவர்களை ஊக்கப்படுத்துதல்.
- பள்ளிகளில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தினை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்ற ஆசிரியர் சமூகத்தின்

கற்பிக்கும் திறனை வளர்த்தல் மற்றும் புதிய சிந்தனைகளுக்கு வழிகாட்டியாக இருத்தல்.

தமிழ்நாட்டில், 38 மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்காக பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் நிதியம்(UNICEF), பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அறிவுசார் பங்குநிறுவனமாக (Knowledge Partner) செயல்பட்டு, ஆசிரியர்கள் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கள ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் திறன் வளர்ப்பு பயிற்சியுடன் கூடிய புத்தாக்க சிந்தனைக்கான தொழில்நுட்ப உதவி, காணொளி அடிப்படையிலான பாடத்திட்டங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது.

2023–2024 ஆம் நிதியாண்டில், திருவாரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களை முன்னோடி மாவட்டங்களாக கொண்டு 6–ஆம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி புத்தாக்க மேம்பாடு திட்டம் செயல்படுத்தப்பட்டது.

**சாதனைகள்:**

- மொத்தம் 7.55 இலட்சம் பள்ளி மாணவர்கள் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் 2.0ன் கீழ் பயனடைந்துள்ளனர்.
- 4483 பள்ளிகளில், 5277 வழிகாட்டி ஆசிரியர்கள் மற்றும் 133504 மாணவர் அணிகளுக்கு புத்தாக்க சிந்தனையை மேம்படுத்துவதற்காக காணொளி அடிப்படையிலான கற்றல் தொகுப்புகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.
- சிறந்த புத்தாக்க சிந்தனைகளைக் கொண்ட 371 மாணவர் அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு,

1656 மாணவர்களை உள்ளடக்கிய மாவட்ட துவக்க முகாம்கள் நடத்தப்பட்டன.

- 2023–2024 ஆம் நிதியாண்டிற்கான இறுதி போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிறந்த அணிகளுக்கு ரூ.25,000/– முதல் ரூ.1,00,000/– வரை பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

**5.2.3. புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டம் (IVP)**

மாநில அரசின் தனித்துவமான முயற்சியாக, புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் விவசாயம், தோட்டக்கலை, கால்நடை மருத்துவம், மீன்வளம், பொறியியல், திடக்கழிவு மேலாண்மை, சுகாதாரம், நுண் தொழில்நுட்பம், மின்னணுவியல் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்புகள் உருவாக்க ஊக்கப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அளவிலான தேர்வு குழுவின் மூலம் புத்தாக்க

கண்டுபிடிப்புகள் தேர்வு செய்யப்பட்டு, அதனை செயல்வடிவம் கொடுப்பதற்கு மானியமாக, ரூ.2 இலட்சமும் மற்றும் கண்டுபிடிப்பினை சந்தைப்படுத்துவதற்காக ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2023-2024-ஆம் நிதியாண்டில், 87 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.1.95 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.11.25 கோடி மதிப்பீட்டில், வேளாண்மை, சுகாதாரம், உற்பத்தி, உணவு அறிவியல் போன்ற துறைகளில் 436 புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 5.2.4. தொழில் வளர் காப்பகங்கள் – தமிழ்நாடு உற்பத்தி தொழில் வளர் காப்பகங்கள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்று தொழில்நுட்ப அடிப்படையிலான

தொழில்முனைவோரை உயர்த்துவதாகும். தொழில் செய்ய இணை இடவசதி (Co–working), கருத்தரங்குகள், விழிப்புணர்வு முகாம்கள், ஆதார நிதி, செயல்பாடுகளில் இணைப்பு மற்றும் ஆலோசனை சேவைகள், அறிவுசார் சொத்துரிமைக்கான உதவி போன்ற பல்வேறு சேவைகள் தொழில் வளர் காப்பகங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

தொழில் வளர் காப்பகங்கள் மூலம், பல்வேறு துறைகளில் உள்ள 815 வளர் காப்பாளர்கள் உதவி பெற்றுள்ளனர். 79,895 தொழில்முனைவோர்கள், பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சிகளின் மூலம் பயனடைந்துள்ளனர். இதுவரை 9 தொழில் வளர் காப்பகங்கள் மூலம் ரூ.3.44 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தொழில் வளர் காப்பகங்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | தொழில் வளர்காப்பகத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் கழகத்தில் அமைந்துள்ள கால்நடை தொழில் வளர்காப்பக மையம், சென்னை மாவட்டம் | கால்நடை |
| 2. | பெரியகுளம் தோட்டக்கலை தொழில் வளர்காப்பக மையம், பெரியகுளம், தேனி மாவட்டம் | தோட்டக்கலை |
| 3. | கிள்ளிகுளம் வேளாண் தொழில் வளர்காப்பக மையம், கிள்ளிகுளம், தூத்துக்குடி மாவட்டம் | வேளாண்மை |
| 4. | திருச்சிராப்பள்ளி வேளாண் தொழில் வளர்காப்பக மையம், திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | வேளாண்மை |
| 5. | மேட்டுப்பாளையம் வேளாண் காடுகள் தொழில் வளர்காப்பக மையம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | வேளாண் காடுகள் |
| 6. | கடல்சார் உணவுப்பொருட்கள் தொழில் வளர் காப்பக மையம், தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் | மீன்வளம் |
| 7. | அண்ணா தொழில் வளர்காப்பக மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | மருந்தியல் |
| 8. | பெரியார் பல்கலைக்கழக தொழில்வளர் காப்பக கூட்டமைப்பு, சேலம், சேலம் மாவட்டம் | உணவு மற்றும் ஊட்டச்சத்து |
| 9. | அண்ணாமலை புத்தாக்க மற்றும் தொழில்வளர் காப்பக ஆராய்ச்சி அறக்கட்டளை, சிதம்பரம், கடலூர் மாவட்டம் | மேம்படுத்தப்பட்ட உற்பத்தி |

### 5.3. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்

சமூக ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள் ஆகிய தளங்கள் மூலம் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN) செயல்படுத்தும் திட்டங்கள் பற்றிய தகவல், அறிவு மற்றும் தகவல் தொடர்புகளைப் கொண்டு ஊக்குவிக்கின்றது. தொழில்முனைவு மற்றும் புதுமை சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களால் உருவாக்கப்பட்ட புத்தாக்க தயாரிப்புகளை காட்சிப்படுத்த "கண்காட்சி தினம்" (Demo day) நடத்தப்பட்டது. இதில் 232 மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர். தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் (EDII–TN) செயல்பாடுகளை ஊக்குவிக்க சமூக ஊடகங்கள் ஒரு தளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொழில்முனைவோர்

மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஹேக்கத்தான் மற்றும் பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டு திட்டத்திற்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

# 6. தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம் (FaMe–TN)

தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைப்பு (MSME Trade and Investment Promotion Bureau), 2019–ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது. 2022–ஆம் ஆண்டில் M–TIPB அமைப்பு "தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் முகமை" (Bureau for Facilitating MSMEs of Tamil Nadu: – FaMeTN) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இம்முகமையானது, பல்வேறு நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான சேவைகளை பெற வழிவகை செய்கிறது.

2023–2024–ஆம் ஆண்டில் FaMeTN முகமையின் முக்கிய நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகள் பின்வருமாறு.

**6.1. கடன் வசதிகளுக்கு வழிகோலுதல்**

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த, நிலையான வளர்ச்சிக்கான இலட்சியங்கள் (UNSDG) எண்.9 இன் இலக்கு 9.3–க்கு ஏற்ப, சிறு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் நியாயமான கடன் வசதிகளை பெறுதல் உட்பட நிதி சேவைகளுக்கு வழிகோலுதல் பணிகளை FaMeTN மேற்கொள்கிறது.

**அ. முறைப்படுத்தப்பட்ட கடன்: தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS)**

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான முறைப்படுத்தப்பட்ட கடன் அணுகலை மேம்படுத்த, 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS) தொடங்கப்பட்டது.

இத்திட்டம், ஒன்றிய அரசின் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் கடன் உத்தரவாத அறக்கட்டளையுடன் (CGTMSE) இணைந்து செயல்படுத்தப்படும்போது, ரூ.40 லட்சம் வரையிலான பிணையில்லாக் கடனுக்கு 90% உத்தரவாதமும், ரூ.40 லட்சம் முதல் ரூ.2 கோடி வரையிலான கடனுக்கு 80% உத்தரவாதமும் வழங்குகிறது. மேலும், உற்பத்தி நிறுவனங்களுக்கு ரூ.40 லட்சம் வரையிலான கடன்களுக்கு 90% தனிப்பட்ட உத்தரவாதத்தையும் TNCGS வழங்குகிறது.

2023–2024 ஆம் ஆண்டில் CGTMSE உடன் இணைந்து செயல்படுத்தப்படும் இணை உத்தரவாதத் திட்டத்தின் வாயிலாக ரூ.4116.13 கோடி பிணையில்லா கடனுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டதன் மூலம், 23,000 க்கு மேற்பட்ட குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் பயன் பெற்றுள்ளன. இவற்றுள், 7000–க்கும் மேற்பட்ட மகளிர், 900 SC/ ST மற்றும் 30 மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர் அடங்குவர்.

**ஆ. நிலுவைத்தொகை பெறுதலை துரிதப்படுத்துதல்: தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் (TNTReDS)**

மாநில பொதுத்துறை நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன விற்பனையாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையினை விரைந்து பெற்றிட தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் (TNTReDS) 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுவரை, 98 தமிழ்நாடு மாநில பொதுத்துறை நிறுவனங்கள், 1,460 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன விற்பனையாளர்கள் இத்தள்ளுபடி தளத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். 31 மார்ச் 2024 வரை, ரூ.2,139.14 கோடி மதிப்புள்ள விலைப்பட்டியல்களை தள்ளுபடி செய்ததன் மூலம் 936 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

## 6.2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP)

FaMeTN, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கடன் வசதி, சந்தைவாய்ப்பு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் இந்நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத்தொகை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை பசுமையாக்கல் ஆகிய பணிகளை மேம்படுத்த, ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல்" (RAISING AND ACCELERATING MSMES PERFORMANCE) திட்டத்தினை செயல்படுத்துவதற்கான மாநில முகமையாக செயல்படுகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான டிஜிட்டல் வசதியாக்கல்

சேவைகள், தொழில்துறை மாற்றங்களுக்கான செயல்திட்டங்கள், விற்பனையாளர் மேம்பாட்டுத்திட்டங்கள், சர்வதேச வாங்குபவர் – விற்பனையாளர் சந்திப்புகள், தரச்சான்றிதழ்கள், அறிவுசார் சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு முயற்சிகள் மற்றும் இடையீடுகள் நான்கு ஆண்டுகளில் செயல்படுத்த இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ரூ.165 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. RAMP திட்டத்தின்கீழ் பல்வேறு முன்னெடுப்புகள் மற்றும் இடையீடுகள் செயல்படுத்தும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 6.3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான டிஜிட்டல் வசதிகள்

FaMeTN, டிஜிட்டல் வசதி சேவைகளுக்கான தளத்தை உருவாக்கி வருகிறது. இத்தளமானது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எளிமையாக தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் மானியங்கள் மற்றும் FaMeTN முகமையின்

வசதியாக்கல் சேவைகள் உட்பட பெற உதவும். இத்தளம் முதன்மையாக, ஒன்றிய அரசின் துறைகள் மற்றும் தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தகவல்களை தொழில்துறை தரவுத்தளத்தின் ஒரு பகுதியாக பயன்படுத்தும். இத்தொழில்துறை தரவுத்தளம், தரவு ஆதரவு கொள்கை உருவாக்கம் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நலனுக்கான முன்முயற்சிகளைச் செம்மைப்படுத்தவும் மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசுக்கு உதவும்.

## 6.4. சந்தைகளுக்கான அணுகல்

குறுகிய சந்தைக்குள் செயல்பட்டு வரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் போட்டிகள் நிறைந்த சந்தைகளில் ஊடுருவி, தங்களுக்கான வாடிக்கையாளர்களை திறம்பட சென்றடைய போராடுகின்றன. இன்றைய மாறும் வணிக சூழ்நிலைக்கு ஏற்ப, குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்கள் இச்சவாலை எதிர்கொண்டு முன்னேறுவது மிகவும் முக்கியமானதாகவுள்ளது. வர்த்தகபொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகள், வணிகப்பரிந்துரைகள், இ–காமர்ஸ், பெரிய தொழில் நிறுவனங்களுடன் B2B நிகழ்வுகள் மற்றும் UNSDG எண்.9 இன் இலக்கு 9.3க்கு ஏற்ப "ஏற்றுமதிகள், சிறு அளவிலான தொழில்துறை மற்றும் பிற நிறுவனங்களை மதிப்பில் ஒருங்கிணைத்தல்" உள்ளிட்ட பல சந்தைவழிகளில் FaMeTN, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வசதியாக்கல் பணிகளை வழங்குகிறது. பிப்ரவரி, 2024 இல் FaMeTN மற்றும் அரசு மின்னணு சந்தை (GeM) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 04.03.2024 அன்று GeM பயிலரங்கம் நடத்தப்பட்டது. இதில், சுமார் 100 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டதுடன், 20 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அன்றைய தினமே GeM

தளத்தில் இணைந்தன. இந்நிதி ஆண்டில் மாநிலம் முழுவதும் இதே போன்ற பயிலரங்கங்கள் மற்றும் GeM மின்னணு தளத்தில் இணையும் அமர்வுகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**அ. சந்தை இடைவெளியைக் குறைத்தல்: வர்த்தக பொருட்காட்சிகள் & கண்காட்சிகள் மற்றும் இ–காமர்ஸ்**

FaMeTN, 2023–24 ஆம் ஆண்டில், 214 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை பல்வேறு கண்காட்சிகளில் பங்கேற்க வழிவகை செய்தது. மேலும், 7 முக்கிய கண்காட்சிகளில் FaMeTN முகமையின் அரங்குகள் அமைக்கப்பட்டன. கோயம்புத்தூரில் சர்வதேச பொறியியல் கண்காட்சி, மும்பையில் ப்ளெக்ஸ்கனெக்ட் – 2023 மற்றும் HGH இந்தியா கண்காட்சி, நொய்டாவில் இண்டஸ்ஃபுட்–2024, கோயம்புத்தூரில் அக்ரி இன்டெக்ஸ் – 2023 மற்றும் சென்னையில் இந்தியா சுற்றுலா மற்றும் வர்த்தக பொருட்காட்சி – 2024

ஆகியவை இதில் அடங்கும். GeM, ONDC மற்றும் Flipkart உள்ளிட்ட பல்வேறு மின் வணிக தளங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இடம்பெறுவதற்கு FaMeTN அவ்வப்போது பயிலரங்கங்களை நடத்திவருகிறது. சுமார் 5,000 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் Flipkart தளத்தில் இணைந்து, ரூ.11.5 கோடி அளவிற்கு வர்த்தகம் செய்துள்ளன. தற்போது, 70,088 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விற்பனையாளர்களாக GeM தளத்தில் இணைந்துள்ளன. இதில் 22% மகளிரால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களாகும்.

### ஆ. வாங்குபவருக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனத்திற்கும் உள்ள இடைவெளியைக் குறைத்தல்: B2B

பெரிய தொழில்நிறுவனங்களை சார்ந்தே குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இயங்குகின்றன. FaMeTN, பெரிய நிறுவனங்களுக்கும்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க பல விற்பனையாளர் மேம்பாட்டுத் திட்டங்களை / அரசு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து B2B சந்திப்புகள் நடத்தி வருகிறது. 2023–2024 ஆம் ஆண்டில், FaMeTN, இதுபோன்ற ஏழு சந்திப்புகளை சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (CPCL), சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL), மற்றும் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL) உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து நடத்தியது. பிரிட்டிஷ் துணை உயர் ஆணையத்துடன் இணைந்து பிரிட்டிஷ் நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே இரண்டு B2B சந்திப்புகள் நடத்தப்பட்டன.

### இ. வர்த்தகத்தை எளிதாக்குதல்: ஏற்றுமதி மற்றும் சந்தை நுழைவு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஏற்றுமதி செய்வதற்கும், உலகளாவிய மதிப்புச் சங்கிலியின் ஒரு அங்கமாக இருக்க அவர்களுக்கு உதவுவதும் FaMeTN முகமையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். 2023-24 ஆம் ஆண்டில், FaMeTN முகமை சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவிற்கான சந்தை நுழைவுத் திட்டங்களை சந்தை நுழைவு நிபுணர்களுடன் இணைந்து நடத்தியது. இவை உணவுபதப்படுத்துதல் மற்றும் ஜவுளித்துறைகளுக்காக நடத்தப்பட்டன. அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட தொழில் மையங்களில் (DICs) மாவட்ட ஏற்றுமதி வசதியாக்கல் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## 6.5. தரம் மற்றும் நிலைத்தன்மை

தரம் மற்றும் நிலைத்தன்மை குறித்து மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள், ஐக்கிய

நாடுகள் சபையின் நீடித்த, நிலையான வளர்ச்சி இலட்சியத்தின் இலக்கு (UNSDG) 7-ஐ அடைவதை இலக்காகக் கொண்டது, 'அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான மற்றும் நவீன ஆற்றலுக்கான அணுகலை உறுதி செய்தல்' மற்றும் இலக்கு 9.4 இன் 'உட்கட்டமைப்பு மற்றும் மறுசீரமைப்பு தொழில்களை நிலையானதாக மேம்படுத்துதல். அதிகரித்த வளத்துடன் – செயல்திறன் மற்றும் சுத்தமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை அதிக அளவில் மேற்கொள்வது' ஆகிய குறிக்கோளை அடைவதை அடிப்படையாகக் கொண்டது.

FaMeTN இந்திய மற்றும் உலகளாவிய சந்தைகளை சென்றடைதலை அதிகரிக்கவும் விரிவுபடுத்தவும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தரச் சான்றிதழ்களைப் பெறுவதற்கும் வசதியாக்கல் பயிலரங்குகளை நடத்துகிறது. 2023-24ஆம் ஆண்டில், ஒன்றிய அரசின் ஜீரோ டிஃபெக்ட் ஜீரோ எஃபெக்ட் (ZED) சான்றிதழ்

திட்டத்தின் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக 12 பயிலரங்குகள் நடத்தப்பட்டன. 2024-25 ஆம் ஆண்டில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மேலும் 50 பயிலரங்குகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி செயல்முறைகளில் மின்நுகர்வைக் குறைப்பதற்கான வழிமுறைகளை தெரிந்து கொள்ள ஏதுவாக ஆறு துறைகளுக்கு ஆற்றல் திறன் பயிலரங்குகள் நடத்தப்பட்டன.

**6.6. வர்த்தக பரிந்துரை (Sponsorship)**

FaMeTN முகமை தனது வர்த்தக பரிந்துரை கொள்கை மூலம் இந்தியா மற்றும் உலகம் முழுவதும் வர்த்தக பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்க குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுகிறது. FaMeTN முகமை தனது ஸ்பான்சர்ஷிப் கொள்கையின் மூலம் 2023 – 2024 ஆம் ஆண்டில் 11 சங்கங்கள் / அமைப்புகளுக்கு

ரூ.191.26 இலட்சம் மற்றும் 58 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.69.76 லட்சம் வழங்கியுள்ளது. இதில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (TAHDCO) நடத்திய TN BEAT Expo 2024, SC/ST தொழில்முனைவோருக்கான கண்காட்சி மற்றும் வணிக மாநாட்டிற்காக வழங்கிய ரூ.10 இலட்சம் நிதியுதவியும் அடங்கும்.

### 6.7. துறைசார் முயற்சிகள்: மின்சார வாகனங்கள்

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மின் வாகன (EV) சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடன் "மின்சார வாகன பணிக்குழு (EV Task force)" அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குழு தொடர்புடைய துறைகளான தொழில்துறை (Guidance TN, SIPCOT), TNSDC, TIDCO, TNIFMC மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் இதர அமைப்புகளுடன் (StartUp TN மற்றும் TANSIDCO) ஒருங்கிணைந்து பணியாற்றுகிறது. குறு, சிறு மற்றும்

நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் EV உதிரிபாகங்களை உற்பத்தி செய்வதை ஊக்குவித்தல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை EV சந்தைகளுடன் இணைத்தல், தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கான கூட்டாண்மைகளை எளிதாக்குதல், உட்கட்டமைப்புகளை நிறுவுதல், தொழிலாளர்களுக்கு தொழில் திறமை/ மறு திறமை மேம்படுத்துதல் போன்ற பல முயற்சிகளை எளிதாக்குவதன் மூலம் EV பணிக்குழு தமிழ்நாட்டில் ஒரு முழுமையான EV சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

## 6.8. தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 (TNGIM 2024)

FaMeTN, இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்புடன் (FIEO) இணைந்து TNGIM 2024 மாநாட்டில் ஒரு சர்வதேச வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பை நிகழ்த்தியது. 23 நாடுகளைச் சேர்ந்த 38 வாங்குபவர்களும், தமிழ்நாட்டில் இருந்து 370 குறு,

சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் பங்கேற்றனர். இச்சந்திப்பில் ரூ.42.60 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) மற்றும் கொள்முதல் ஆணைகள் முடிவு செய்யப்பட்டன. இதில் 73 முதல்முறை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன ஏற்றுமதியாளர்களின் ரூ.16.42 கோடி வர்த்தகமும் அடங்கும்.

இது தவிர, FaMeTN, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து 58 புவிசார்குறியீடு (GI) பெறப்பட்ட தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தும் விதமாக அமைத்த GI அரங்கானது, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. வாகன பாகங்கள், விண்வெளி மற்றும் பாதுகாப்பு, தொழில்நுட்ப ஜவுளி, மருத்துவ சாதனங்கள் மற்றும் வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உள்ள 25 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை துறை சார்ந்த அரங்கில் காட்சிப்படுத்த,

FaMeTN உதவி புரிந்தது. மேலும், FaMeTN "எதிர்காலத்திற்கு தயாரான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்: தமிழ்நாட்டின் போட்டித்தன்மையை மேம்படுத்துதல் (Future–Ready MSMEs: Driving Tamil Nadu's Competitive edge") என்ற தலைப்பில் ஒரு குழு–கலந்துரையாடலை நடத்தியது. சிறந்த தொழில் முனைவோர், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் தொழில்துறை சார்ந்த அரசு பிரதிநிதிகள் கலந்துரையாடல் குழுவில் பங்கேற்றனர். இது, குழு உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர்களிடம் நல்ல வரவேற்பினைப் பெற்றது.

# 7. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (டான்சிம்)

புதுயுக தொழில் முனைவு சூழமைவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டினை முன்னிறுத்தும் நோக்கத்தில் மாநிலத்தின் புத்தொழில் மற்றும் புத்தாக்கம் சார்ந்த செயல்பாடுகளில் சிறப்பு கவனம் செலுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம். ஸ்டார்ட்அப் டி.என் (Startup TN) என்ற முத்திரையுடன் இயங்கும் இந்த நிறுவனமானது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டினை 2032–ஆம் ஆண்டுக்குள், பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்ட தர நிலைகளின்படி, சிறந்த புத்தொழில் சூழமைவு கொண்ட உலகின் முதல் 20 இடங்களில் ஒன்றாக உருவாக்குதல் என்ற நீண்ட கால இலக்கினை

முன்வைத்து, தமிழ்நாட்டில் பெரும் மாற்றங்களை நிகழ்த்தக்கூடியதும் புதுயுக வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடியதும், பெரும் பொருளாதாரத்தினை ஈட்டக்கூடியதுமான புத்தாக்க நிறுவனங்கள் உருவாவதற்கு ஆதரவான சூழலை கட்டமைத்தலுக்குத் தேவையான செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது இந்த நிறுவனம்.

மேலும், முதலீட்டாளர் நம்பகத்தன்மை, முறையான வருவாய் மாதிரிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் புத்தொழில் சூழமைவினை தோற்றுவித்தல், ஏனைய நாடுகள் எடுத்துக்காட்டாக கொள்ளும் அளவிற்கு தொழில்முனைவில் அனைவருக்கும் சமமான வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குதல் என சீரிய புதுயுக தொழில் முனைவு வளர்ச்சியினை அடையவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதார நிதி வழங்குதல், முதலீட்டாளர் இணைப்புகளை

ஏற்படுத்துதல், சந்தை அணுகலுக்கு தேவையான பயிற்சிகளை அளித்தல், அரசுத்துறைகள் மற்றும் பெருநிறுவனங்களை புத்தாக்க நிறுவனங்களுடன் இணைத்தல் ஆகிய பல திட்டங்களை செயலாக்கி வருகிறது இந்நிறுவனம்.

**7.1. நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள்:**

- 2023, செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கையின்படி, கொள்கை காலத்தில் (2023–2028), 15000 புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்வதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் மாநிலத்தில் ஏற்படுத்துதல்.
- இந்தியாவில் சிறந்த புத்தொழில் சூழமைவு கொண்ட முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாட்டினை நிலைநிறுத்துதல்.
- பெருநகரங்களில் மட்டுமின்றி, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் உள்ள

புத்தொழில் நிறுவனங்களின் சீரான வளர்ச்சியினையும் உறுதி செய்தல்.

- தொழில் வளர் காப்பகங்கள் சூழமைவில் எண்ணிக்கையிலும், தரத்திலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்துதல் .
- புத்தொழில் நிறுவனங்களுக்கான முதலீடுகளை ஈர்ப்பதில் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாட்டினை இடம் பெறச் செய்தல்.
- பட்டியலின/பழங்குடியின தொழில்முனைவோர் மற்றும் பெண் தொழில்முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள மாநிலமாக தமிழ்நாட்டினை நிலைநிறுத்துதல்.
- புத்தொழில் சூழமைவில் செயல்படும் இணை செயல்பாட்டாளர்களோடு (Stakeholders) புத்தொழில் நிறுவனர்களை இணைப்பதன் வாயிலாக புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவு அளித்தல்.

- புத்தொழில் மற்றும் புத்தாக்க செயல்பாடுகளுக்கு தேவைப்படும் தனித்திறன் வாய்ந்த பணியாளர்களை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபடுதல்.
- பல்வேறு துறைகளில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு, துறை சார் ஒருங்கிணைப்புத் தளங்களை உருவாக்குவதன் மூலம், துறைகளுக்கேற்ற தனித்துவமான ஆதரவுகளை வழங்குதல்.
- ஏஞ்சல் முதலீட்டாளர்கள், துணிகர முதலீட்டு நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் வாயிலாக புத்தொழில் முதலீடுகளுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல்.
- உலகளாவிய புத்தொழில் வள ஒருங்கிணைப்பு மையங்களை அமைப்பதன் வாயிலாக, உலகத்தளத்தில் சிறந்த "திறனறிவு மற்றும் புத்தாக்க மையமாக" தமிழ்நாட்டினை நிலைநிறுத்துதல்.

- உலகளாவிய புத்தொழில் தளத்தில் போட்டியிடத் தகுதியான திறனாளர்களாக தமிழ்நாட்டு தொழில் முனைவோர்களை மேம்படுத்துதல்.
- ஆதார நிதி அல்லது பங்கு முதலீடாக வழங்கப்படும் அரசின் நிதி உதவிகளை எளிதாக பெறுவதற்கு தேவையான வழிமுறைகளை உருவாக்குதல்.
- அனைத்து தரப்பு மக்களுக்கும் சமமான தொழில் வாய்ப்புகளை வழங்கும் "அனைவரையும் உள்ளடக்கிய தொழில்முனைவு சூழலை" கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டினை கட்டமைக்கும் இலக்கினை அடையத் தேவையான பல நிகழ்வுகளையும் திட்டங்களையும் வடிவமைத்தல்.
- பல்வேறு பெரு நிறுவன கூட்டமைப்புகளுடன் இணைந்து, புத்தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பெரு

நிறுவனங்கள் கொள்முதல் செய்வதற்கான தளங்களை உருவாக்குதல்.

**7.2. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை:**

தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமைவை மேம்படுத்தும் வகையிலும், புத்தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு ஆதரவுகளை வழங்கும் வகையிலும் "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை – 2023–2028" உருவாக்கப்பட்டு, 20.09.2023 அன்று வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையானது 2030–க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற இலக்கினை அடைவதில் புத்தொழில் நிறுவனங்களின் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்கு அடிப்படையாக இருக்கும்.

புத்தொழில் சார்ந்த அறிவினை மேம்படுத்துதல், மாநிலத்தின் புத்தாக்க சூழமைவினை வலுப்படுத்துதல்,

முதலீட்டு சூழமைவினை வலுப்படுத்துதல், சந்தை அணுகலுக்கு தேவையான வாய்ப்புகளை வழங்குதல், தொழில்முனைவு செயல்பாட்டாளர்களுடன் இணைந்து செயல்படுதல், புத்தொழில் ஆதரவு மையங்களை அமைத்தல், அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொழில் முனைவு வளர்ச்சியினை உறுதி செய்தல் ஆகிய 7 அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 7.3. வட்டார புத்தொழில் மையங்கள்

சென்னை போன்ற பெருநகரங்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் உள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள் என அனைத்துப் பகுதிகளிலும் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கும் வகையில் கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் மதுரை, திருநெல்வேலி, ஈரோடு, சேலம், கடலூர், ஓசூர், தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் வட்டார புத்தொழில் மையங்கள்

தொடங்கப்பட்டுள்ளன. அவ்வட்டாரப் பகுதிகளில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஆதரவுகளை வழங்கும் விதமாகவும் தொழில்முனைவு மேம்பாட்டை வலுப்படுத்தும் வளங்களை ஒருங்கிணைக்கும் இணைப்புப் பாலமாகவும் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 8–ன்படி அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான, நீடிக்கத்தகு பொருளாதார வளர்ச்சியினை அடைய உதவும் வண்ணம், இவ்வட்டார மையங்களின் செயல்பாடுகள் அமைந்து வருகின்றன. இவ்வட்டார புத்தொழில் மையங்களின் வாயிலாக 350–க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன. புத்தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவு ஆர்வலர்கள், மாணவர்கள் என 37000–க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர்.

## 7.4. தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி (டான்சீட்)

தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டமானது, தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக, ரூ.10 இலட்சம் ஆதார நிதியாக வழங்குவது தமிழ்நாடு அரசின் ஒரு முக்கிய முன்னெடுப்பாகும்.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 5–ன் படி பாலின சமத்துவம் என்பது சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதது. புத்தொழில் செயல்பாடுகளிலும் பாலின சமத்துவத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில், இத்திட்டத்தில் 25 சதவீதம் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதியானது ரூ.15 இலட்சமாக வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாது, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 13,14,15 ஆகியவற்றின் அடிப்படையில் காலநிலை மாற்ற மேலாண்மை, சுழற்சி பொருளாதாரம்,

நீடித்த பயன்பாடுகள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பசுமைத்தொழில் நுட்ப நிறுவனங்களுக்கும், ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்து இயங்கும் நிறுவனங்களுக்கும், இந்த நிதியானது ரூ .15 இலட்சமாக வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் நிதி ஆண்டில், டான்சீட் திட்டத்தின் மூலம் 23 நிறுவனங்கள் பயன்பெற்றுள்ளன. இதுவரை 132 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.13.95 கோடி ஆதார நிதியானது இத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், டான்சீட் 6-ஆம் பதிப்பிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தகுதியான நிறுவனங்களை தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு 40 புத்தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.5. தமிழ்நாடு பட்டியலினத்தவர்/பழங்குடியினர் புத்தொழில் நிதி

புதுயுகத் தொழில்முனைவில் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்காக 2022–2023–ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தப் பிரிவுகளை சார்ந்த தொழில்முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டுவரும் புத்தொழில் நிறுவனங்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் பங்கு முதலீடு அல்லது பிணையில்லா கடனாக நிதி வழங்கப்பட்டு வருகின்றது. 2023–2024 ஆம் நிதி ஆண்டில் 17 புத்தொழில் நிறுவனங்களில் ரூ.27.10 கோடி முதலீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் மூலமாக இத்திட்டத்தின் கீழ் இப்பிரிவுகளைச் சார்ந்த இன்னும் பலர் பயன்பெறும் வகையில் மேலும் பல விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

## 7.6. ஒன்றிய அரசின் "சிறந்த செயல் திறன் மாநிலம் – Best Performer" விருது

ஒன்றிய அரசின் "ஸ்டார்ட் அப் இந்தியா" அமைப்பானது, சிறந்த புத்தொழில் சூழமைவினை கட்டமைக்கும் வகையில் செயல்படும் மாநிலங்களின், 2022–ஆம் ஆண்டிற்கான தரவரிசைப் பட்டியலை 16.01.2024 அன்று வெளியிட்டது. இதில், தமிழ்நாடு முதல் தரவரிசை இடமான "சிறந்த செயல்திறன் மாநிலம் (Best Performer)" இடத்தினை பிடித்தது. 2018–ல் கடைசி (Emerging) நிலையில் இருந்த தமிழ்நாடு, தற்போது முதல் நிலையில் இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி, தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதி, தமிழ்நாடு வளர்ந்து வரும் துறைகளுக்கான ஆதார நிதி, புத்தாக்க பற்று சீட்டுத்திட்டம் ஆகிய நிதித்திட்டங்களை செயல்படுத்துதல், தொழில் வளர் காப்பகங்களை சிறப்பாக ஒருங்கிணைப்பதன் மூலம்,

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுதல், பசுமைத்தொழில்நுட்பம், ஊரக வாழ்வாதார மேம்பாடு ஆகியவை சார்ந்து இயங்கும் நிறுவனங்கள் மற்றும் பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கான சிறப்புத்திட்டங்களை செயல்படுத்துதல், ஆகியவை தமிழ்நாட்டின் மிக சிறப்பான செயல்பாடுகளாக ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 7.7. வழிகாட்டி மென்பொருள்

புதுயுக தொழில் முனைவுப் பயணத்தில் தொழில்முனைவோர்களுக்கு துறைசார் அறிவும், அனுபவமும் கொண்ட அறிவுரைஞர்களின் வழிகாட்டுதல்களை பெறுதல் அவசியம். இதன் அடிப்படையில் பல்வேறு துறைசார்ந்தும், தொழில் முனைவு சார்ந்தும் வழிகாட்டுதல்களை வழங்க தயாராக இருக்கும் அறிவுரைஞர்களையும், தொழில் முனைவோர்களையும் இணைக்கும் வகையில் MentorTN தளம் தொடங்கப்பட்டது. இத்தளத்தில்

மொத்தம் 733 புத்தொழில் நிறுவனங்கள் இணைந்துள்ளன. மற்றும், 257 வழிகாட்டுநர்கள் இணைந்துள்ளனர். சுமார் 200 மணிநேரங்களுக்கும் மேலாக இத்தளத்தின் வழியாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இதன் பயனாளர்களை அதிகரிக்கத் தேவையான முன்னெடுப்புகள் செயல்படுத்தப்படும்.

## 7.8. தொழில் வளர் காப்பகங்கள் திறன் மேம்பாடு

புத்தொழில் நிறுவனங்களுக்கு தொழில் வளர் காப்பகங்களின் ஆதரவு அவசியம். இதனை கருத்தில் கொண்டு மாநிலத்தில் உள்ள தொழில் வளர்காப்பகங்கள் திறன் மேம்பாட்டிற்கு உதவும் வகையில், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நிதி ஆண்டில் 93 தொழில் வளர் காப்பகங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதுடன், சிறப்பாக செயல்படும் தொழில் வளர் காப்பகங்களை தேர்ந்தெடுத்து தலா ரூ.5 இலட்சம் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 தொழில் வளர்

காப்பகங்களுக்கு மொத்தம் ரூ.75 இலட்சம் வளர்ச்சி நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 5 தொழில் வளர் காப்பகங்களின் நிர்வாகிகளை சிங்கப்பூர் நாட்டிற்கு அழைத்து சென்று அங்குள்ள சிறந்த செயல்பாடுகளை அறிந்து கொள்ள வழி செய்யப்பட்டது. இந்தத் திட்டங்கள் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.9. தொலைபேசி சேவை மையம்

புத்தொழில் மற்றும் தொழில்முனைவு குறித்த எவ்வித கேள்விகளுக்கும் தொலைபேசி வழியே பதில் அளிக்கும் விதமாக தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பதில் அளிக்கும் குழுவினரைக் கொண்ட இரு மொழி தொலைபேசி சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக 4100–க்கும் மேற்பட்ட அழைப்புகளுக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதி ஆண்டில் தொழில்முனைவோர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் செயற்கை நுண்ணறிவு

தொழில்நுட்பத்தினை மையமாகக் கொண்ட chatbot செயலியினை வெளியிட தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் திட்டமிட்டுள்ளது.

### 7.10. தமிழ்நாடு ஸ்டார்ட் அப் திருவிழா

மாநிலத்தில் புத்தொழில் பண்பாட்டினை பரவலாக்கும் நோக்கத்துடன், புத்தொழில் சார்ந்த செயல்பாட்டாளர்கள் அனைவரையும் ஒரு தளத்தில் இணைக்கும் விதமாக மாபெரும் ஸ்டார்ட்அப் திருவிழா நிகழ்வு கோயம்புத்தூரில் கடந்த ஆகஸ்ட் மாதம் இரண்டு நாள் நிகழ்வாக நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 450 புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்ற கண்காட்சி அரங்கம் இடம் பெற்றது. 21,000–க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். 50 முதலீட்டாளர்கள் மற்றும் 60 புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்ற தொடர் சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. மேலும் 87 புத்தொழில் நிறுவனங்கள் தங்களின் தயாரிப்புகளை அறிமுகப்படுத்த வழிவகைசெய்யப்பட்டது.

## 7.11. முதலீட்டாளர் இணைப்பு

முதலீடுகள் தேவைப்படும் புத்தொழில் நிறுவனங்களையும், முதலீட்டாளர்களையும் இணைக்கும் நோக்கத்தில் "முதலீட்டாளர் இணைப்புத்தளம் – TANFUND" உலக முதலீட்டாளர் மாநாடு 2024–இல் தொடங்கப்பட்டது. இதுவரை 230 துணிகர முதலீட்டு நிறுவனங்களும் 3389 புத்தொழில் நிறுவனங்களும் இதில் பதிவு செய்துள்ளனர்.

## 7.12. ஸ்மார்ட் கார்ட்

மனிதவள மேலாண்மை தொழில்நுட்பம், சட்ட ஆலோசனைகள், சந்தை வாய்ப்பு மற்றும் வியாபார ஆலோசனைகள், நிதிக் காப்பீடு, மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம், ஊடகம் மற்றும் விளம்பரம் போன்ற துறைகள் சார்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளை புத்தொழில் நிறுவனங்கள் சலுகை விலையில் பெற்று பயனடையும் நோக்கத்தோடு, புத்தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு

சலுகைத்தொகுப்புகள் கொண்ட ஸ்மார்ட் கார்ட் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் 4000 புத்தொழில் நிறுவனங்களுக்கு இந்த ஸ்மார்ட் கார்டு அட்டை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**7.13. பெரியார் சமூக நீதி புத்தொழில் வளர் மையம்**

2024–25 –ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பில் தெரிவித்தவாறு, பெரியார் சமூக நீதி புத்தொழில் வளர் மையம் தொடங்கப்பட உள்ளது. இம்மையத்தின் வாயிலாக இந்த ஆண்டு 100 புத்தொழில் நிறுவனங்களுக்கு தகுந்த ஆதரவுகளை வழங்க தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் திட்டமிட்டுள்ளது. மேலும், இதன் உப திட்டமாக தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் முதலீடு பெற்ற நிறுவனங்களுக்கு முதலீட்டிற்கு பிந்தைய தொழில் பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 7.14. அரசுத்துறைகள் – புத்தொழில் நிறுவனங்கள் கொள்முதல் நாள் நிகழ்வுகள்

புத்தொழில் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பினை அதிகரிக்க உதவும் வண்ணம் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், ரூ.50 இலட்சம் மதிப்பு வரையில் உற்பத்தி துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்து கொள்ளலாம் என ஒப்பந்த விதிகள் தளர்த்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும், புத்தொழில் நிறுவனங்களுக்கும் இடையிலான நேரடி கொள்முதலை எளிதாக்கும் வண்ணம் "அரசுத்துறைகள் – புத்தொழில் நிறுவனங்கள் கொள்முதல் நாள்" நிகழ்வுகளை தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் ஒருங்கிணைக்கின்றது. ஐந்து அரசுத்துறைகளுடன் இந்நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு புத்தொழில் நிறுவனங்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதி ஆண்டில்

தமிழ்நாடு அரசின் அனைத்து அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து இந்நிகழ்வுகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**7.15. தொடக்க நிலை தொழில்வளர் காப்பகங்கள்**

தமிழ்நாட்டில் உள்ள 25 கல்வி நிறுவனங்களில் தொடக்க நிலை தொழில் வளர் காப்பகங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அமைப்பதற்கு ஒரு நிறுவனத்திற்கு தலா ரூ.7.5 இலட்சம் வரை மானிய நிதியானது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக வழங்கப்படும். இந்த தொடக்க நிலை தொழில் வளர் காப்பகங்கள் பிரிவு 8 நிறுவனமாக இருக்க வேண்டும். புத்தாக்கம் மற்றும் புத்தொழில் பண்பாட்டினை ஊக்குவிக்கும் விதமாக இயங்கும் இந்த நிறுவனங்களில் முழு நேர ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

**7.16. புத்தாக்க சவால் இணையதளம்**

பெருநிறுவனங்கள் (கார்ப்பரேட்), ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறைகள் சார்ந்த புத்தாக்கத் தேவைகளுக்கு தீர்வு காணும் புத்தொழில் நிறுவனங்களை இணைக்கும் விதமாகவும் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 9–ன்படி, புத்தாக்க செயல்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கும் விதமாகவும் புத்தாக்க சவால் இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. இத்தளத்தின் வாயிலாக பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட சிக்கல் கூறுகளுக்கு புத்தொழில் நிறுவனங்கள் தீர்வு காணும் விதமாக சவால்கள் நடைபெற்றுக்கொண்டுள்ளன. இந்த நிதி ஆண்டில் மேலும் 10 நிறுவனங்களுடன் இணைந்து புத்தாக்க சவால்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**7.17. ஒருங்கிணைந்த இணையதளம்**

மாநிலத்தில் புத்தாக்கம் சார்ந்து இயங்கும் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் தனியார்

மையங்களின் வசதிகள், சேவைகள் குறித்த தகவல்களை எளிதாகப் பெறவும், அம்மையங்களை அணுகுவதற்கும் ஏற்றவாறு, தமிழ்நாடு அரசின் சார்பாக ஒருங்கிணைந்த இணையதளம் தொடங்கப்பட உள்ளது. புத்தாக்கம் சார்ந்து இயங்கும் மாணவர்கள், புதுயுக தொழில் முனைவோர்கள், ஆய்வாளர்கள், துணிகர முதலீட்டாளர்கள் என அனைவருக்கும் தேவையான முழுமையான தகவல்களை வழங்கும் பொதுவான தளமாக இது இருக்கும். இந்த இணைய தளத்தினை முறையாக வடிவமைப்பதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கமானது ஈடுபடும்.

## 7.18. உலக முதலீட்டாளர் மாநாடு

கடந்த ஜனவரி மாதம்– 2024, சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்" தமிழ்நாடு புத்தொழில்

மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், புத்தொழில் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தும் அரங்கம் அமைக்கப்பட்டு இருந்தது. 41 அரங்குகள் கொண்ட இதில் மின்வாகனம், உணவு மற்றும் வேளாண் தொழில் நுட்பம், நிதித் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம் ஆகிய 20–க்கும் மேற்பட்ட துறைகள் சார்ந்து இயங்கும் நிறுவனங்கள் இடம்பெற்று இருந்தன. இதில் 20 நிறுவனங்கள், தமிழ்நாடு அரசால் முதலீட்டு உதவி பெறப்பட்டவை மற்றும் 10 நிறுவனங்கள் பெண்களால் நடத்தப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், முதலீட்டாளர்கள் முன்னிலையில் புத்தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் விதமாக அமர்வுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு இருந்தன. இதில், 200–க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் கலந்து கொண்டனர். இந்த

நிதி ஆண்டில், நிதிநிலை அறிவிப்பில் அறிவித்தவாறு புத்தொழில் நிறுவனங்களை முதன்மைப்படுத்தும் விதமாக "உலக புத்தொழில் மாநாடு" நடைபெறவுள்ளது.

**தா. மோ. அன்பரசன்**
**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**

# இணைப்பு – 1

# தொழிற்பேட்டைகளின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 1. | கிண்டி | அரசு | 1958 | 404.08 |
| | | 2. | அரும்பாக்கம் | சிட்கோ | 1979 | 3.92 |
| | | 3. | வில்லிவாக்கம் | சிட்கோ | 1979 | 2.04 |
| | | 4. | கொடுங்கையூர் | சிட்கோ | 1979 | 7.88 |
| | | 5. | பெருங்குடி | அரசு | 1974 | 112.55 |
| | | 6. | திருவான்மியூர் | அரசு | 1967 | 28.91 |
| | | 7. | அம்பத்தூர் | அரசு | 1963 | 1167.00 |
| 2. | திருவள்ளூர் | 8. | காக்களூர் | அரசு | 1988 | 328.13 |
| | | 9. | திருமழிசை | சிட்கோ | 1988 | 160.85 |
| | | 10. | கும்மிடிபூண்டி | சிட்கோ | 1988 | 25.24 |
| | | 11. | ஆர்.கே.பேட் | சிட்கோ | 1996 | 8.15 |
| | | 12. | விச்சூர் | சிட்கோ | 1994 | 59.16 |
| | | 13. | திருமுல்லை –வாயல் (ம.தொ.பூ) | சிட்கோ | 2001 | 246.07 |
| | | 14. | செங்கரை | சிட்கோ | 2017 | 36.25 |
| 3. | செங்கல்பட்டு | 15. | மறைமலைநகர் | சிட்கோ | 1981 | 39.50 |
| | | 16. | ஆலத்தூர் (பார்மா) | சிட்கோ | 1984 | 150.49 |
| | | 17. | ஆலத்தூர் (பகுதி–2) | சிட்கோ | 2022 | 67.96 |
| | | 18. | தண்டரை | சிட்கோ | 2017 | 44.30 |
| | | 19. | கொடூர் | சிட்கோ | 2023 | 99.13 |
| 4. | காஞ்சிபுரம் | 20. | காஞ்சிபுரம் | அரசு | 1968 | 37.95 |
| | | 21. | திருமுடிவாக்கம் (முதன்மை) | சிட்கோ | 1993 | 201.11 |
| | | 22. | திருமுடிவாக்கம் (குறு) | சிட்கோ | 2013 | 5.262 |
| | | 23. | திருமுடிவாக்கம் (ம.தொ.பூ) | சிட்கோ | 2002 | 11.48 |
| | | 24. | திருமுடிவாக்கம் பகுதி–2 | சிட்கோ | 2017 | 22.44 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | இராணிப் பேட்டை | 25. | அரக்கோணம் | அரசு | 1968 | 51.74 |
| | | 26. | இராணிப்பேட்டை | சிட்கோ | 1972 | 113.44 |
| | | 27. | முகுந்தராயபுரம் | சிட்கோ | 1980 | 86.19 |
| | | 28. | வன்னிவேடு | சிட்கோ | 1987 | 16.44 |
| | | 29. | முள்ளுவாடி மற்றும் நாகலேரி | சிட்கோ | 2020 | 20.00 |
| 6. | திருப்பத்தூர் | 30. | விண்ணமங்கலம் | சிட்கோ | 2009 | 10.49 |
| | | 31. | வாணியம்பாடி | சிட்கோ | 2013 | 7.08 |
| | | 32. | மின்னூர் | சிட்கோ | 2014 | 9.75 |
| 7. | வேலூர் | 33. | காட்பாடி | அரசு | 1968 | 19.48 |
| 8. | திருவண்ணா மலை | 34. | திருவண்ணாமலை | அரசு | 1968 | 15.56 |
| | | 35. | பெரியகோளப்பாடி | சிட்கோ | 2022 | 57.18 |
| 9. | கிருஷ்ணகிரி | 36. | கிருஷ்ணகிரி | அரசு | 1965 | 41.86 |
| | | 37. | ஊத்தங்கரை | சிட்கோ | 1995 | 41.28 |
| | | 38. | ஒசூர் | அரசு | 1974 | 12.34 |
| | | 39. | ஒசூர் (சிப்காட்) | சிட்கோ | 1976 | 95.15 |
| | | 40. | ஒசூர் (புதியது) | சிட்கோ | 1999 | 24.41 |
| | | 41. | பர்கூர் | சிட்கோ | 1995 | 31.64 |
| | | 42. | போலுப்பள்ளி | சிட்கோ | 2009 | 60.96 |
| 10. | தருமபுரி | 43. | தருமபுரி | அரசு | 1965 | 20.28 |
| | | 44. | கடகத்தூர் | சிட்கோ | 2009 | 7.02 |
| | | 45. | பர்வதனஹள்ளி | சிட்கோ | 2014 | 29.89 |
| | | 46. | ஈச்சம்பாடி | சிட்கோ | 2017 | 50.46 |
| 11. | சேலம் | 47. | சேலம் | அரசு | 1967 | 19.55 |
| | | 48. | மேட்டூர் | அரசு | 1967 | 184.38 |
| | | 49. | கருப்பூர் (ம.தொ.பூ) | சிட்கோ | 2004 | 51.24 |
| | | 50. | வீரபாண்டி | சிட்கோ | 1993 | 9.79 |
| | | 51. | கோரணம்பட்டி | சிட்கோ | 2017 | 16.61 |
| | | 52. | சூரமங்களம் | அரசு | 1986 | 27.50 |
| | | 53. | பெரியசீரகப்பாடி | சிட்கோ | 2022 | 56.81 |
| 12. | நாமக்கல் | 54. | நாமக்கல் | சிட்கோ | 1977 | 10.09 |
| | | 55. | திருச்செங்கோடு | சிட்கோ | 1980 | 9.18 |
| | | 56. | வேட்டம்பாடி | சிட்கோ | 2014 | 15.34 |
| | | 57. | இராசம்பாளையம் | சிட்கோ | 2022 | 36.80 |
| 13. | ஈரோடு | 58. | ஈரோடு | அரசு | 1959 | 25.13 |
| | | 59. | நஞ்சைஊத்துக் –குளி | சிட்கோ | 1995 | 13.05 |
| | | 60. | பெருந்துறை | சிட்கோ | 2017 | 49.47 |
| 14. | கோயம்புத்தூர் | 61. | குறிச்சி | அரசு | 1972 | 88.43 |
| | | 62. | மலுமிச்சம்பட்டி | சிட்கோ | 1994 | 36.14 |
| | | 63. | காளப்பட்டி | அரசு | 1972 | 13.46 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. | திருப்பூர் | 64. | கணபதிபாளையம் | சிட்கோ | 1993 | 17.10 |
| | | 65. | திருப்பூர் | சிட்கோ | 1978 | 10.14 |
| | | 66. | குடிமங்கலம் | சிட்கோ | 1992 | 6.74 |
| | | 67. | ராசாத்தவலசு | சிட்கோ | 2011 | 51.80 |
| 16. | நீலகிரி | 68. | ஊட்டி | சிட்கோ | 1981 | 10.65 |
| 17. | கடலூர் | 69. | கடலூர் | அரசு | 1971 | 15.60 |
| | | 70. | வடலூர் | அரசு | 1972 | 26.22 |
| | | 71. | பெரியநெசலூர் | சிட்கோ | 2015 | 90.80 |
| | | 72. | விருதாச்சலம் | அரசு | 1961 | 41.53 |
| 18. | விழுப்புரம் | 73. | பட்டணம் | சிட்கோ | 2014 | 60.57 |
| | | 74. | வெண்மணியாத்தூர் | சிட்கோ | 2011 | 36.82 |
| 19. | கள்ளக்குறிச்சி | 75. | காட்டுவனஞ்சூர் | சிட்கோ | 2014 | 42.00 |
| 20. | பெரம்பலூர் | 76. | எலம்பலூர் | சிட்கோ | 2009 | 44.48 |
| 21. | அரியலூர் | 77. | மல்லூர் | சிட்கோ | 2014 | 25.34 |
| 22. | தஞ்சாவூர் | 78. | தஞ்சாவூர் | அரசு | 1968 | 21.94 |
| | | 79. | கும்பகோணம் | அரசு | 1968 | 32.30 |
| | | 80. | பிள்ளையார்பட்டி | சிட்கோ | 1974 | 10.96 |
| | | 81. | நாஞ்சிக்கோட்டை | சிட்கோ | 1996 | 26.30 |
| | | 82. | பாளையப்பட்டி | சிட்கோ | 2012 | 104.37 |
| 23. | நாகப்பட்டினம் | 83. | நாகப்பட்டினம் | அரசு | 1966 | 20.97 |
| 24. | மயிலாடுதுறை | 84. | மயிலாடுதுறை | சிட்கோ | 2009 | 12.56 |
| 25. | திருச்சி | 85. | துவாக்குடி | அரசு | 1974 | 478.38 |
| | | 86. | திருவெறும்பூர் | அரசு | 1974 | 74.50 |
| | | 87. | அரியமங்கலம் | அரசு | 1974 | 17.64 |
| | | 88. | கும்பக்குடி | சிட்கோ | 2009 | 24.46 |
| | | 89. | வாழவந்தான் கோட்டை (ம.தொ.பூ) | சிட்கோ | 2003 | 51.70 |
| | | 90. | வாழவந்தான் கோட்டை | சிட்கோ | 2008 | 179.02 |
| | | 91. | மணப்பாறை | சிட்கோ | 2023 | 20.00 |
| 26. | கரூர் | 92. | கரூர் (வெள்ளாளப்பட்டி) | அரசு | 1974 | 26.63 |
| | | 93. | கரூர் (ஆத்தூர்) | சிட்கோ | 1993 | 36.29 |
| | | 94. | புஞ்சைகாளக் குறிச்சி | சிட்கோ | 2016 | 52.076 |
| 27. | புதுக்கோட்டை | 95. | புதுக்கோட்டை | அரசு | 1974 | 23.18 |
| | | 96. | புதுக்கோட்டை (சிப்காட்) | சிட்கோ | 1988 | 51.45 |
| | | 97. | மாத்தூர் | சிட்கோ | 1975 | 26.00 |
| | | 98. | மாத்தூர் (புதியது) | சிட்கோ | 2013 | 19.92 |
| | | 99. | ஆலங்குடி | சிட்கோ | 2022 | 36.47 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28. | தேனி | 100. | தேனி | அரசு | 1963 | 26.59 |
| | | 101. | ஆண்டிப்பட்டி | சிட்கோ | 1994 | 22.34 |
| | | 102. | மரிக்குண்டு | சிட்கோ | 2017 | 79.40 |
| 29. | திண்டுக்கல் | 103. | திண்டுக்கல் | அரசு | 1965 | 39.91 |
| | | 104. | வத்தல குண்டு | அரசு | 1965 | 16.26 |
| 30. | மதுரை | 105. | கே.புதூர் | அரசு | 1960 | 56.05 |
| | | 106. | கப்பலூர் | அரசு | 1966 | 535.64 |
| | | 107. | கப்பலூர் (ம.தொ.பே) | சிட்கோ | 2008 | 35.37 |
| | | 108. | சக்கிமங்கலம் | சிட்கோ | 2023 | 31.88 |
| 31. | இராமநாதபுரம் | 109. | பரமக்குடி | சிட்கோ | 1976 | 10.00 |
| | | 110. | கீழநாகாச்சி | சிட்கோ | 1993 | 10.00 |
| | | 111. | உரப்புளி | சிட்கோ | 1993 | 12.14 |
| | | 112. | சக்கரக்கோட்டை | சிட்கோ | 2017 | 100.00 |
| 32. | சிவகங்கை | 113. | காரைக்குடி | அரசு | 1966 | 180.19 |
| | | 114. | சிவகங்கை | அரசு | 1966 | 70.61 |
| | | 115. | கிருங்காக்கோட்டை | சிட்கோ | 1993 | 21.85 |
| 33. | விருதுநகர் | 116. | விருதுநகர் | அரசு | 1958 | 45.65 |
| | | 117. | இராஜபாளையம் | சிட்கோ | 1995 | 41.13 |
| | | 118. | விருதுநகர் (நகர்புறம்) | சிட்கோ | 2013 | 37.54 |
| 34. | தென்காசி | 119. | கடையநல்லூர் | சிட்கோ | 1992 | 10.00 |
| | | 120. | குருக்கள்பட்டி | சிட்கோ | 2019 | 68.80 |
| 35. | திருநெல்வேலி | 121. | பேட்டை | அரசு | 1959 | 50.55 |
| | | 122. | வள்ளியூர் | சிட்கோ | 2005 | 39.91 |
| | | 123. | கங்கை –கொண்டான் | சிட்கோ | 2020 | 14.90* |
| 36. | தூத்துக்குடி | 124. | கோவில்பட்டி | அரசு | 1962 | 85.54 |
| | | 125. | தூத்துக்குடி –பகுதி 1 | சிட்கோ | 1988 | 9.72 |
| | | 126. | தூத்துக்குடி – பகுதி 2 | சிட்கோ | 2003 | 14.46 |
| | | 127. | பிடாநேரி | சிட்கோ | 2016 | 108.23 |
| 37. | கன்னியாகுமரி | 128. | கோணம் | அரசு | 1964 | 20.70 |
| | | 129. | மார்த்தாண்டம் | அரசு | 1964 | 7.50 |
| | | | **மொத்தம்** | | | **8598.06** |

*சிப்காட் கோரிக்கையின் படி 74.92 ஏக்கர் நிலம் சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## இணைப்பு – 2

## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பொது வசதி மைய திட்டங்கள்

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம்புத்தூர் | 2.88 | 0.99 | 0.17 | 1.73 | 0.00 |
| 2. | ஜவ்வரிசி குழுமம், சேலம் | 0.92 | 0.73 | 0.00 | 0.19 | 0.00 |
| 3. | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம், வேலூர் மாவட்டம் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 4. | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 5. | தீப்பெட்டிக் குழுமம், வில்லிபுத்தூர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 6. | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 8. | தீப்பெட்டிக் குழுமம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 9. | பீங்கான் குழுமம், விருதாச்சலம், கடலூர் மாவட்டம் | 0.83 | 0.43 | 0.10 | 0.18 | 0.11 |
| 10. | கயிறு குழுமம், சிவகங்கை | 6.59 | 5.00 | 0.66 | 0.93 | 0.00 |
| 11. | அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர், தென்காசி மாவட்டம் | 6.91 | 4.66 | 0.69 | 1.46 | 0.10 |
| 12. | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஓசூர் | 6.91 | 4.39 | 0.71 | 1.05 | 0.75 |
| 13. | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 11.73 | 9.64 | 1.00 | 1.08 | 0.00 |
| 14. | அரிசி ஆலைக்குழுமம், ஆலங்குளம், தென்காசி மாவட்டம் | 7.87 | 5.50 | 0.79 | 0.84 | 0.74 |
| 15. | ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ் குழுமம், சேலம் | 16.33 | 12.78 | 1.00 | 2.55 | 0.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16. | அரிசி மில் குழுமம், தஞ்சாவூர் | 2.12 | 1.00 | 0.40 | 0.21 | 0.50 |
| 17. | பிளாஸ்டிக் குழுமம் காஞ்சிபுரம் | 14.85 | 10.27 | 1.00 | 2.58 | 1.00 |
| 18. | அச்சுக் குழுமம், சிவகாசி | 13.15 | 7.68 | 0.91 | 1.80 | 2.76 |
| 19. | தங்க நகைக் குழுமம், மதுரை | 3.56 | 2.56 | 0.29 | 0.40 | 0.31 |
| 20. | பொறியியல் குழுமம், பரமக்குடி | 4.99 | 3.74 | 0.23 | 0.54 | 0.48 |
| 21. | ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் பாத்திரக் குழுமம், கும்பகோணம் | 1.26 | 0.99 | 0.08 | 0.20 | 0.00 |
| 22. | ஆயுத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம், விருதுநகர் மாவட்டம் | 1.04 | 0.74 | 0.09 | 0.21 | 0.00 |
| 23. | கயிறு குழுமம், ஈரோடு | 5.92 | 4.04 | 0.48 | 0.60 | 0.79 |
| 24. | பொறியியல் குழுமம், அம்பத்தூர் | 11.24 | 8.05 | 0.54 | 1.15 | 1.50 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25. | தங்க நகைக் குழுமம், திருச்சி | 3.60 | 2.88 | 0.36 | 0.36 | 0.00 |
| 26. | பொறியியல் குழுமம், இராணிப் –பேட்டை | 9.27 | 6.16 | 0.97 | 1.09 | 1.04 |
| 27. | கேட் மற்றும் கிரில் குழுமம், திருமுல்லை –வாயில் | 3.45 | 1.98 | 0.90 | 0.57 | 0.00 |
| 28. | தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப்பட்டி, விருதுநகர் மாவட்டம் | 3.47 | 2.05 | 0.36 | 0.43 | 0.64 |
| 29. | பின்னலாடைக் குழுமம், திருப்பூர் | 15.34 | 8.34 | 3.00 | 4.00 | 0.00 |
| 30. | நெசவு குழுமம், பெருந்துறை, ஈரோடு மாவட்டம் | 18.68 | 9.63 | 1.87 | 7.18 | 0.00 |
| 31. | அறைக்கலன்கள் குழுமம், சேலம் | 14.46 | 10.67 | 1.89 | 1.89 | 0.00 |
| 32. | அச்சு மற்றும் அட்டை பெட்டி குழுமம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 13.95 | 11.04 | 1.39 | 1.52 | 00.00 |
| | **மொத்தம்** | **210.69** | **141.11** | **20.54** | **36.24** | **12.81** |

## இணைப்பு – 3

## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்தில் உள்ள பொது வசதி மைய திட்டங்கள்

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம் மாவட்டம் | 13.34 | 8.86 | 0.99 | 1.62 | 1.87 |
| 2. | கனரக வாகன கட்டுமானக் குழுமம், நாமக்கல் மாவட்டம் | 16.53 | 12.82 | 1.86 | 1.86 | 0.00 |
| 3. | ஆயத்த ஆடை குழுமம், திருப்பூர் மாவட்டம் | 16.25 | 8.57 | 3.00 | 4.68 | 0.00 |
| 4. | விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம், எலம்பலூர், பெரம்பலூர் மாவட்டம் | 12.19 | 9.31 | 1.22 | 1.26 | 0.40 |
| 5. | விசைத்தறி குழுமம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம் | 20.09 | 11.99 | 2.51 | 5.59 | 0.00 |
| 6. | வடிவமைப்புக் குழுமம், திருப்பூர் | 14.67 | 9.79 | 1.47 | 3.41 | 0.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | கம்பளி குழுமம், குன்னூர், நீலகிரி மாவட்டம் | 2.84 | 2.27 | 0.28 | 0.28 | 0.00 |
| 8. | விசைத்தறி குழுமம், பல்லடம், திருப்பூர் மாவட்டம் | 17.59 | 11.52 | 1.76 | 4.31 | 0.00 |
| 9. | அச்சுக் குழுமம், சேலம் | 13.47 | 10.76 | 1.35 | 1.35 | 0.00 |
| 10. | தங்க நகைக் குழுமம், திருநெல்வேலி | 7.48 | 5.99 | 0.75 | 0.75 | 0.00 |
| 11. | தங்க நகைக் குழுமம், சென்னை | 10.32 | 8.25 | 1.03 | 1.03 | 0.00 |
| 12. | துல்லிய கருவிகள் தயாரிப்புக்குழுமம், ஓசூர் | 16.09 | 12.87 | 1.61 | 1.61 | 0.00 |
| 13. | அட்டைப் பெட்டி அச்சு குழுமம், திருப்பத்தூர், | 13.58 | 10.72 | 1.36 | 1.51 | 0.00 |
| 14. | தங்க நகை குழுமம், கோயம்புத்தூர் | 15.30 | 11.80 | 1.53 | 1.96 | 0.00 |
| 15. | கயிறு குழுமம், திண்டுக்கல் | 18.68 | 14.33 | 2.80 | 2.80 | 0.00 |
| 16. | தோல் குழுமம், பல்லாவரம், செங்கல்பட்டு மாவட்டம் | 20.00 | 14.00 | 3.00 | 3.00 | 0.00 |
| 17. | ப்ரிண்ட் லேம் குழுமம், காஞ்சிபுரம் | 31.41 | 18.00 | 6.00 | 7.41 | 0.00 |
| **மொத்தம்** | | **259.83** | **181.85** | **32.50** | **44.43** | **2.27** |

## இணைப்பு – 4

## குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

(ரூ. கோடியில்)

| வ. எண். | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு |
|---|---|---|---|---|
| 1 | அட்டை பெட்டி குழுமம், கவுண்டம்பாளையம், திருப்பூர் மாவட்டம் | 3.90 | 2.50 | 1.40 |
| 2 | வெள்ளி கொலுசு குழுமம், சிவதாபுரம், சேலம் மாவட்டம் | 2.50 | 1.75 | 0.75 |
| 3 | நெகிழி மறுசுழற்சி குழுமம், அப்பநாயக்கன்பட்டிபுதூர், கோயம்புத்தூர் மாவட்டம் | 4.00 | 2.50 | 1.50 |
| 4 | பொது வசதி மையம் உருவாக்குதல், காக்களூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், திருவள்ளூர் மாவட்டம் | 2.91 | 2.04 | 0.87* |
| 5 | தீப்பெட்டி குழுமம், குடியாத்தம், வேலூர் மாவட்டம் | 3.62 | 2.50 | 1.12 |
| | **மொத்தம்** | **16.93** | **11.29** | **5.64** |

* சிறப்பு நோக்க ஊர்திக்கு பதிலாக சிட்கோவின் பங்களிப்பு

**செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்**

**(ரூ. கோடியில்)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு |
|---|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் உருவாக்குதல், ஈரோடு தொழிற்பேட்டை, ஈரோடு மாவட்டம் | 6.52 | 2.33 | 4.19 |
| 2. | திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி –I தொழிற்சாலை ஆலைக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2.60 | 1.80 | 0.80 |
| 3. | வார்ப்பு குழுமம், வெள்ளலூர், கோயம்புத்தூர் மாவட்டம் | 4.44 | 2.50 | 1.94 |
| **மொத்தம்** | | **13.56** | **6.63** | **6.93** |

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**
**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு**
**கோரிக்கை எண்.44**

**(ரூ. ஆயிரத்தில்)**

| **கணக்குத் தலைப்பு** | **வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–2024** | **திருத்திய மதிப்பீடு 2023–2024** | **வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–2025** |
|---|---:|---:|---:|
| 2059 பொதுப் பணிகள் | 0 | 0 | 10000 |
| 2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 12735141 | 13939989 | 14410921 |
| 2852 தொழில்கள் | 685942 | 270931 | 682884 |
| 3451 தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 71311 | 65602 | 62813 |
| 4408 உணவுப் பொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | 50000 | 50000 | 0 |
| 4851 கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 50003 | 50002 | 3 |
| 6851 கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள் | 1500001 | 1200000 | 400000 |
| 7610 அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 1 | 4000 | 1 |
| **மொத்தம்** | **15092399** | **15580524** | **15566622** |




சேலத்தைச் சேர்ந்த டிவைன் ஃபுட்ஸ் நிறுவனத்துக்கு "தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி (TANSEED)"
திட்டத்தின் மூலம் ரூ.10 இலட்சம் நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணையை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 08.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நவீன கழிவு நீர் அகற்றும் ஊர்திக்கான கடனுதவி மற்றும் மானியம் வழங்கும் விழா நடைபெற்றது.






கிண்டி தொழிற்பேட்டையில் ரூபாய் 94.67 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அடுக்குமாடி
தொழிற் கூட வளாகம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களால்
24.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.




மகளிரால் நடத்தப்படும் 15 புத்தொழில் நிறுவனங்களுக்கு "தொழில் வளர் காப்பக (Incubation) உதவித் தொகை" மொத்தம் ரூ.14.70 இலட்சம் நிதியினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்



உலக முதலீட்டாளர் மாநாடு 2024-இன் போது நடைபெற்ற பன்னாட்டு வாங்குவோர் விற்போர் சந்திப்பில் கொள்முதல் ஒப்பந்தம் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.



உலக முதலீட்டாளர் மாநாடு 2024-இல் புவி சார் குறியீடு பெற்ற பொருட்களுக்கான கண்காட்சியினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.




மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் 06.03.2024 அன்று SADP திட்டத்தின் கீழ் 100% நிதியுதவியில் பெறப்பட்ட 13 இலை சேகரிப்பு வாகனங்களை தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கினார்.



மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் 06.03.2024 அன்று கைகாட்டி தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் SADP திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சூரிய ஒளி மின்னாற்றல் ஆலையை தொடங்கி வைத்தார்.




மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் EDII-TN-ன் ஹேக்கத்தான் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "Demo Day" நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கினார்.



புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பல் மருத்துவமனை-திட்ட மதிப்பீடு ரூ.116.60 இலட்சம், தமிழ்நாடு அரசு மானியம் ரூ.29.14 இலட்சம்



புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்ட ஆயத்த ஆடைகள் நிறுவனம்-திட்ட மதிப்பீடு ரூ.98 இலட்சம், தமிழ்நாடு அரசு மானியம் ரூ.23.20 இலட்சம்




செங்கல்பட்டு மாவட்டத்தில் முதலீட்டு மானிய திட்டத்தின் கீழ் ரூ.120.92 இலட்சம் மானிய உதவி பெற்ற பிரிண்டட் சர்க்யூட் போர்ட் நிறுவனம்



கோயம்புத்தூர் மாவட்டம் கிட்டாம்பாளையம் கிராமத்தில் தி/ள், அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் 06.03.2024 அன்று ஆய்வு செய்தார்.




திருச்சி மாவட்டம் மணப்பாறையில் புதிய தொழிற்பேட்டை

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.